விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 140 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 24 செவ்வாய்க்கிழமை (07.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கிராம உத்தியோகஸ்தர்களுக்கான நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன

## தெல்லிப்பழையில் பெற்ற தாயை கொலை செய்த மகன் சரண்

### மருத்துவ பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழையில் உயிரிழந்த குடும்பப் பெண்ணைக் கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் குறித்த பெண்ணின் மகன் நேற்று முன்தினம் தெல்லிப்பழைப் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

தெல்லிப்பழையிலுள்ள வீடொன்றிலிருந்து இரு நாட்களுக்கு முன் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டது. அது கொலையா? அல்லது தற்கொலையா? என சந்தேகம் நிலவிய

15

## கிளிநொச்சியில் இராணுவத்தினர் காணிகளை அபகரிக்க முயற்சி

### சட்டவிரோதமாக கட்டடமும் கட்டப்படுகின்றது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இராணுவத்தினர் காணிகளை அபகரிக்க முயற்சி செய்து வருவதோடு அங்கு சட்டவிரோதமாக கட்டடங்களையும் கட்டி வருகின்றனர்.

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் யுத்த நினைவுச்சின்னம் அமைக்கப்பட்ட இடத்தில் சட்டவிரோதமாக இராணுவத்தினர் விளையாட்டுப் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்

15

# வடக்கு அபிவிருத்திக்கு ஒத்துழைக்கத் தயார்

## இலங்கைக்கான நோர்வேத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்புக்களைத் தொடர்ச்சியாக வழங்கத் தயார் என இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கான நோர்வே தூதுவர் மே-எலின் ஸ்டெனர், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்று சந்தித்து கலந்துரையாடினார். வடக்கு மாகாண ஆளுநரின்

02

### புத்தூர் சிவன் கோவிலில்

## மரத்திலிருந்து தவறி விழுந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு சிவன்கோவில் பகுதியில் மரத்தில் இருந்து தவறிவிழுந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் கலாசாலை வீதி திருநெல்வேலியை சேர்ந்த செல்வமுத்து சிவலிங்கம் (வயது -62) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

02

## விசா கட்டணம் அதிகரிக்கப்பட்டது

(கொழும்பு)

இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான விசாக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கான 30 நாள் விசாவிற்கு தற்போதுள்ள 50 அமெரிக்க டொலர் விசா கட்டணத்தை நிலை நிறுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

15

## மல்லாகத்தில் மாடுகள் வெட்டும் கொல்களம் நேற்று முற்றுகை

### பசுவும் கன்றுக்குட்டியும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கிய கொல்களம் ஒன்று நேற்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் மாடுகள் கொலை செய்யப்படுவதாகக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் கீரிமலை மற்றும் மல்லாகம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

15

### ஜனாதிபதித் தேர்தலில்

## அனைவரையும் எதிர்கொள்ள நான் தயார் - சஜித்




(கொழும்பு)

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் என்னை எதிர்த்துப் போட்டியிட்டாலும் அத்தனை வேட்பாளர்களையும் எதிர்கொள்ள நான் தயாராகவுள்ளேன் என்று

15

## இலங்கையின் நடப்பு பொருளாதாரம் தொடர்பில்

### ஐக்கிய இராச்சியத்தின் பணிப்பாளருடன் ஜே.வி.பி தலைவர் அநுர கலந்துரையாடல்



15

## கெஹலியவின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

தரமற்ற ஊசியை இறக்குமதி செய்தமை தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 8 சந்தேகநபர்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

15

## மருமகனின் தாக்குதலில் மாமனார் உயிரிழப்பு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா, மதுராநகர் பகுதியில் மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமனார் மரணமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மதுராநகர் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய மோகன் என்பவரே மரணமடைந்தவராவார்.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## கந்தையா பாக்கியம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாக்கியம் அவர்கள் நேற்று (06.05.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் சிவலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கமலாதேவி (ஓய்வு பெற்ற மருத்துவ மாது), கண்மணி, இராசமணி, இராசலெட்சுமி(இந்திரா), சற்குணராணி(கிளி), கருணைராயா, கமலினி(இன்பம் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுலேந்திரனி(சசி), சந்திரராஜ், அரன், டயானா, கண்ணன், கலைமகள், ஷர்மிலா, ஷர்மிலி, சஞ்சீர், சஞ்சித், ரேனுகா, தயாளன், கார்த்திகா, பிரதீப், பிரசாந், சுகன்யா, அனுசன், தர்மிலா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
(680) குடும்பத்தினர்

உ
திருச்சிற்றம்பலம்

# சிவப்பேறு குறித்த அறிவித்தல்

## திருமதி இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு



சிவபூமியில் 16.02.1937 சிவபுரத்தில் 03.05.2024

யாழ். கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வதிவிடமாகக் கொண்ட திருமதி இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு அவர்கள், பகைக்கெடு ஆண்டு சித்திரைத் திங்கள் திருநாவுக்கரசர் குரு பூசையுடன் கூடிய, தேய் பிறை பத்தாம் பிறைநாள் (03-05-2024) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி -செல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் திரு. திருநாவுக்கரசு அவர்களின் பாசமிகு மனைவியும் விக்னேஸ்வரன், ரோகினி, பாமினி அவர்களின் பாசமிகு தாயாரும் சோபனா, கிருஷ்ணகுமார், தர்மதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இரத்தினம்மா, மாணிக்கவாசகர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அபிலாஷன், ஆரூரன், ஆதித்தியா, அதிசயா, அனுஷன், திருமதி ஆஞ்ஜனா நிரோஜன், அதிகன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆக்சனா, அரோன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 55 Run Gince, Montreal QC, H4N 137 எனும் முகவரியில் உள்ள மலர்ச்சாலையில் மே 9ம் திகதி வியாழக்கிழமை காலை 10மணி முதல் பார்வைக்கு வைக்கப்பட்டு, தொடர்ந்து கிரியைகள் இடம்பெற்று, 2 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்: பெறாமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்
தகவல்: சிவநேசராணி(பெறாமகள்) - +94 (77) 049 9360
சிவநேசமலர்(பெறாமகள்) - +94 (74) 059 1930
பார்த்தீபன்(பேரன்) - +94 (70) 770 1111
(C-0301)

## வடக்கு...

செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் மீள்குடியேற்ற நடவடிக்கையின் முன்னேற்றங்கள், காணி விடுவிப்பு, கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள், சுற்றுலாத்துறை அபிவிருத்தி, கல்வி, இயற்கை சக்தி வளங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனினும், சுற்றுலா வழிகாட்டிகள் போதிய எண்ணிக்கையில் இல்லை எனவும், தங்குமிட வசதிகள் போதுமான அளவு இல்லை எனவும் குறிப்பிட்ட ஆளுநர், சுற்றுலாத் துறையை மேம்படுத்த முதலீடுகள் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

கற்றல் செயற்பாடுகள் மற்றும் தொழிற்கல்வியைப் பெற முடியாது போகும் இளைஞர், யுவதிகள் தொடர்பில் மாற்று வழிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

விடயங்களை கேட்டறிந்துக் கொண்ட இலங்கைக்கான நோர்வே தூதுவர் May-Elin Stener, வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை தொடர்ச்சியாக வழங்கத் தயார் எனவும், ஒருங்கிணைந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தார். (ம-7,10)

லங்கா மஹால் பிறைவேட் லிமிட்ட்
(உள்நாட்டு வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை)
வேலையாள் தேவை
(ஆண், பெண்)
A/L தகைமையுடைய (கணினி அறிவு அடிப்படை) வேலையாள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
65, 2nd cross street, Vavuniya.
077 839 3974
(677)

## மரத்திலிருந்து...

ஆலய வளவில் நின்ற வேப்பமரத்தை தறித்துக்கொண்டிருந்த வேளையிலே குறித்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது குறித்த நபர் ஸ்தலத்திலேயே உயிரிழந்த நிலையில் சடலம் அச்சுவேலி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து உடல்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பிலான மரண விசாரணைகளினை திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,10)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு. தர்மலிங்கம் சிறிகரன் அவர்களின் பாசமிகு தாயார்



## திருமதி தர்மலிங்கம் கமலாதேவி

அவர்கள் 06.05.2024 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 19.06.1949 இறப்பு 06.05.2024

ஆசிரியர் கழகம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
(C-0296)

# மரண அறிவித்தல்

மலர்வு 20 - 09 - 1940



உதிர்வு 06 - 05 - 2024

## மிக்கேற்பிள்ளை மேரி

கொடிகாம வீதி நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மிக்கேற்பிள்ளை மேரி அவர்கள் நேற்று (06.05.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை மிக்கேற்பிள்ளையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான அமலஉற்பவ வசந்தி(மேஜர் சோதியா), இமானுவேல் ராஜ்குமார், ரூபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மேரிசாந்தியின் பாசமிகு பெரியதாயாரும் பிரகலாதனின் அன்பு மாமியாரும் சிவதிலகராணியின் அன்பு மாமியாரும் சுதலீன்(டென்மார்க்), கெவின்(டென்மார்க்), கரோலின்(டென்மார்க்), மாதுளன், நிகரிலான், ஆதிரை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சச்சின்(டென்மார்க்), கிஷாந் (டென்மாக்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் இன்று (07.05.2024) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 9.30 மணியளவில் கரவை தேவமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கரவெட்டி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
80/40 கொடிகாம வீதி, கரவெட்டி வடக்கு. 077 986 2240 (C-0300) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் விசா கட்டணம் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடையும் அபாயம்

(கொழும்பு)

சுற்றுலா விசாவிற்கு இலங்கை அறவிடப்படும் கட்டணத்தை அதிகரிப்பதன் காரணமாக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 50 வீதத்தால் குறையும் அபாயம் உள்ளதாக இலங்கை பயண முகவர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.


தற்போது சுற்றுலா விசாவிற்கு 100.77 டொலர்களை இலங்கை வசூலிப்பதாகவும், விசா கட்டணம் 50 டொலர்களாக இருந்த போது வெளிநாட்டவர்கள் அதிகளவில் வருகை தந்ததாகவும் அந்த சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேலும் ஒரு நபருக்கு 30 நாள் விசாவிற்கு அதிகபட்சமாக 50 டொலர்களை அறவிடுமாறு ஏற்கனவே அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நாட்டில் சுற்றுலாவின் மூலம் வெளிநாட்டு நாணயத்தை ஈட்ட வேண்டுமாயின் அவ்வாறான கட்டணங்கள் இருக்க வேண்டும் எனவும் குறித்த சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது. (நி-6)

# வறட்சியான காலநிலையால் 4982 பேர் பாதிப்பு

(கொழும்பு)

**தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக மூன்று மாவட்டங்களில் 4,982 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**



அதன்படி கிளிநொச்சி உள்ளிட்ட கேகாலை, திருகோணமலை மாவட்டங்களில் 1,542 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் கேகாலை மாவட்டத்தில் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வராகபொல, ருவன்வெல்ல, யட்டியந்தோட்டை, தெரணியகல, தெஹியோவிட்ட, கலிகமுவ மற்றும் கேகாலை ஆகிய பிரிவுகளில் 646 குடும்பங்களைச் சேர்ந்த 2702 பேர் பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இந்தியாவிலிருந்து மீண்டும் முட்டை இறக்குமதி



(கொழும்பு)

நாட்டில் முட்டை விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் மீண்டும் இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மே மாதம் ஆகும்போது முட்டையின் விலை குறைவடைய வேண்டும்.

ஆனால், ஒரு குழுவினர் இருந்து கொண்டு இந்த விடயத்தில் ஏகாதிபத்தியமாக செயற்பட்டு வருகின்றனர்.

அவர்கள் செயற்கையாக முட்டைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, முட்டையின் விலையை தொடர்ச்சியாக உயர்த்தி வருகின்றனர்.

நாம் இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதை நிறுத்தியுள்ளமையால் தான், இவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர்.

இந்த நிலையில், மீண்டும் இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்தால், முட்டைகளின் விலையைக் குறைக்க முடியும் என நாம் நம்புகிறோம்.

இதற்கான அனுமதியை விரைவில் நாம் வழங்குவோம். இந்தியாவிலிருந்து மீண்டும் முட்டைகள் இறக்குமதி செய்த பின்னர், குறைந்த விலையில், முட்டைகளை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலை மாணவர்களுக்கு முட்டை வழங்கும் செயற்பாட்டுக்காக, எமக்கு தற்போது பெருமளவு முட்டைகள் தேவைப்படுகின்றன.

இதற்காக நாம் விரைவிலேயே இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வோம்" என அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# நாடளாவிய ரீதியில் கிராம அலுவலர்கள் போராட்டம்

## இன்றும் தொடரும் என அறிவிப்பு

(கொழும்பு)

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

நாடாளாவிய ரீதியில் கிராம உத்தியோகத்தர்கள் நேற்றிலிருந்து சுகயீன விடுமுறை போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக அகில இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க அறிவித்துள்ளார்.

"பொறுத்தது போதும்" எனும் தொனிப்பொருளில் இவர்கள் பணிபகிஷ்கரிப்பினை முன்னெடுத்துள்ளனர்.

நாடாளாவிய ரீதியில் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறை போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக அகில இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்களது கோரிக்கை தொடர்பாக அமைச்சரவை கூட்டத்தில் உரிய கவனம் செலுத்தப்படாவிடின் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கிராம உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

## ஜூன் மாதம் முதல்

# மின்கட்டணத்தில் மீண்டும் திருத்தம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மீண்டும் மின் கட்டணத்தை திருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷா ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சாரசபை தற்போது மின்சாரக் கட்டணம் தொடர்பான வரைபை தயாரித்து வருவதாகவும் இறுதி வரைவு அடுத்த வாரம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும் எனவும் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# பாராளுமன்ற அமர்வுகள் இன்று ஆரம்பம்


(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று முதல் 10 ஆம் திகதி வரை கூடவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்துள்ளார். இதற்கமைய இன்று முற்பகல் 9.30 இற்கு பாராளுமன்றம் கூடவுள்ளதுடன் பல்வேறு சட்டமூலங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இன்று முற்பகல் 10.30 வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 10.30 முதல் பிற்பகல் 5 மணிவரை பிரிவிடல் திருத்தச் சட்டமூலம் பராட்டே சட்டத்தை 2024 டிசம்பர் 15ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கும் திருத்தச் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (நி-6)


31 ஆம் நாள் நினைவுகளில்

எமது பாடசாலையில் கடமையாற்றும்
திரு. சி. சிவகுமார் அவர்களின் அன்புத் தந்தை
அமரர்.
ஜோசப் சிவசுப்பிரமணியம்



அவர்கள் இறைபதமடைந்த
31 ஆம் நாளில் அன்னாரின்
ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திப்பதோடு பிரிவினால்
ஆறாத்துயருறும் அவரது குடும்பத்தினருடன்
துயர் பகிர்கின்றோம்.
(0046)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/சென். ஜோசப் வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சீறினார் 'சிங்கம்' சூர்யா

## கலங்கியது ஹைதராபாத் ; மீண்டது மும்பை



சூர்யகுமார் சதம் விளாச மும்பை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மும்பை, .வான்கடே மைதானத்தில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் மும்பை - ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணியின் தலைவர் ஹர்திக் பாண்ட்யா "களத்தடுப்பை" தேர்வு செய்தார்.

**பாண்ட்யா அசத்தல்**

ஹைதராபாத் அணிக்கு அபிஷேக் சர்மா (11) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். அன்ஷூல் கம்போஜ் வீசிய 5ஆவது ஓவரில் ஒரு சிக்சர், 2 பவுண்டரி விளாசினார் டிராவிஸ் ஹெட். மயங்க் அகர்வால் (5) ஏமாற்றினார். அபாரமாக ஆடிய ஹெட், 30 பந்துகளில் 48 ஓட்டங்கள் எடுத்தார். நிதிஷ் குமார் ரெட்டி (20) ஆறுதல் கொடுத்தார். கிளாசன் (2) சோபிக்கவில்லை. பாண்ட்யா "வேகத்தில்" மார்கோ ஜேன்சன் (17), ஷாபாஸ் அகமட் (10) வெளியேறினர். அப்துல் சமத் (3) நிலைக்கவில்லை. சாவ்லா பந்தை சிக்சருக்கு பறக்கவிட்ட அணித் தலைவர் கம்மின்ஸ், துஷாரா வீசிய கடைசி ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்தார்.

20 ஓவர்களில் ஹைதராபாத் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களை எடுத்தது.

கம்மின்ஸ் (35), சன்விர் சிங் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**சூர்யகுமார் அபாரம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு இஷான் கிஷான் (9), ரோகித் சர்மா (4), நமன்திர் (0) ஏமாற்றினர். பின் இணைந்த சூர்யகுமார் யாதவ் (செல்லமாக சூர்யா), திலக் வர்மா ஜோடி நம்பிக்கை கொடுத்தது. கம்மின்ஸ் வீசிய 6ஆவது ஓவரில் 2 பவுண்டரி விரட்டினார் திலக். மார்கோ ஜான்சென் வீசிய 7ஆவது ஓவரில் 2 பவுண்டரி, 2 சிக்சர் விளாசிய சூர்யகுமார், 30 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். புவனேஷ்வர் குமார் பந்தை சிக்சருக்கு பறக்கவிட்ட சூர்யகுமார், ஷாபாஸ் அகமட் பந்தில் 2 பவுண்டரிகள் விரட்டினார்.

நடராஜன் பந்தை சிக்சருக்கு அனுப்பி குப்பராக சதம் விளாசிய சூர்யகுமார் வெற்றியை உறுதி செய்தார்.

மும்பை அணி 17.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

சூர்யகுமார் (102 ஓட்., 6 சிக்சர், 12 பவுண்டரி), திலக் (37) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (7,10)

# சாதிப்பரா இந்திய வேகங்கள்

## உலக அணித் தேர்வில் சர்ச்சை



உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியில் மூன்று வேகப் பந்துவீச்சாளர்களை மட்டும் தேர்வு செய்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மே.தீவுகள், அமெரிக்காவில் 9ஆவது "ரி20" உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர், ஜூன் 2-29ல் நடக்க உள்ளது.

இதற்கான இந்திய உத்தேச அணியில் பும்ரா, சிராஜ், அர்ஷ்தீப் சிங் என மூன்று வேகப் பந்துவீச்சாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

மே.தீவுகள், அமெரிக்க ஆடுகளங்கள் சுழலுக்கு சாதகமாக இருக்கும் என்பதால் ஜடேஜா, அக்சர் படேல், குல்தீப், சகால் என நான்கு சுழற்பந்து வீச்சாளர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதில் வேகப்பந்து வீச்சாளர்கள் தேர்வு தான் எல்லோருக்கும் அதிர்ச்சி கொடுத்துள்ளது. ஐ.பி.எல்., தொடர் ஆரம்பமாகும் முன் பும்ரா மட்டும் உறுதியாக இடம் பெறுவார், மற்றவர்கள் தங்களை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர்.

இதற்கேற்ப ஐ.பி.எல்., தொடரின் கடைசி கட்ட ஓவர்களில் தமிழகத்தின் நடராஜன் (7 போட்டி, 13 விக்.,), சந்தீப் சர்மா (4ல் 8), அவேஷ் கான் (9ல் 9) சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர். ஆனால் இவர்களை சேர்க்காமல், சிராஜ், அர்ஷ்தீப் சிங் தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்கள் புதிய பந்தில் நன்றாக "ஸ்விங்" செய்வர். ஆனால் "ரி20" போட்டிகளில் கடைசி நேரத்தில் விளாசும் துடுப்பாட்ட வீரர்களை எப்படி கையாள்வது என தெரிந்திருக்க வேண்டும். இவ்விடயத்தில் நடப்பு தொடரில் சிராஜ் (6 விக்., சராசரி 9.50 ஓட்.,), அர்ஷ்தீப் (12 விக்., 9.63) என இருவரும் ஓட்டங்களை வாரி வழங்குகின்றனர்.

ஆனால் சர்வதேச செயற்பாடு அடிப்படையில் சிராஜ் (10 ல் 12 விக்.,), அர்ஷ்தீப்பை (44ல் 62) தேர்வு செய்துள்ளனர். தவிர இடதுடகை வேகப் பந்து வீச்சாளர் என்பது அர்ஷ்தீப்பை தேர்வு செய்ய காரணமாக உள்ளது. இருப்பினும் "போர்ம்" இல்லாமல் தடுமாறும் இரு வேகப்பந்துவீச்சாளர்களும், உலகக் கிண்ணத் தொடரில் "வேகம்" எடுக்க வேண்டும் என ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர். (7,10)

**ஸ்மித்துக்கு இடமில்லை**

"ரி20" உலகக் கிண்ண அவுஸ்திரேலிய அணியில் முதன் முறையாக முன்னாள் அணித் தலைவர் ஸ்மித் (வயது - 34) சேர்க்கப்படவில்லை.

**அணி விபரம்:** மிட்சல் மார்ஷ் (அணித் தலைவர்), ஏகார், கம்மின்ஸ், ரிம் டேவிட், எல்லிஸ், கிரீன், ஹேசல்வுட், டிராவிஸ் ஹெட், இங்லிஸ், மக்ஸ்வெல், ஸ்டார்க், ஸ்ரொய்னிஸ், வேட், வோர்னர், ஜாம்பா.

**வியப்பு தருகிறது**

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பின்ச் கூறுகையில், "இந்திய அணியில் நான்கு சுழல் பந்து வீச்சாளர்கள் தேர்வு வியப்பு தருகிறது. 2 சுழல் போதுமானது. கூடுதலாக ஒரு "வேகம்", தவிர ரிங்கு சிங்கை சேர்த்திருக்க வேண்டும். ஏனெனில் "பவர் பிளே" ஓவரில் பும்ராவுடன் சேர்ந்து சிராஜ் அல்லது அர்ஷ்தீப் சிறப்பாக செயல்படுவரா எனத் தெரியவில்லை, என்றார்.

# சூரிய வட்டத்துக்கு தேய்பிறை என்றும் இல்லை...

## ரொனால்டோ ஹட்ரிக் ; அல் நாசர் வெற்றி



சவுதி புரோ லீக் போட்டியில் ரொனால்டோ "ஹட்ரிக்" கோல் அடிக்க "அல்-நாசர்" அணி 6-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

சவுதி அரேபியாவில் 48ஆவது சவுதி புரோ லீக் கால்பந்து தொடர் நடக்கிறது.

ரியாத்தில் நடந்த லீக் போட்டியில் அல்-நாசர், அல்-வெஹ்தா அணிகள் மோதின. இதில் கோல் மழை பொழிந்த அல்-நாசர் அணி 6-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

அல்-நாசர் அணி சார்பில் கிறிஸ்டியானோ ரொனால்டோ "ஹட்ரிக்" கோல் (5, 12, 52வது நிமிடம்) அடித்தார். இது, நடப்பு சீசனில் இவரது 4ஆவது "ஹட்ரிக்" கோல். இதுவரை 32 கோல் அடித்து முதலிடத்தில் உள்ளார்.

இன்னும் 2 கோல் அடிக்கும் பட்சத்தில் சவுதி புரோ லீக் அரங்கில் ஒரு சீசனில் அதிக கோல் அடித்த வீரர்கள் வரிசையில் முதலிடத்தை அப்தர்ரசாக் ஹம்தல்லாவுடன் (34 கோல், 2018-19 சீசன்) பகிர்ந்து கொண்டார். அல்-நாசர் அணிக்கு இன்னும் 4 போட்டிகள் மீதமிருப்பதால் ரொனால்டோ புதிய சாதனை படைக்கலாம்.

அல்-நாசர் அணி இதுவரை விளையாடிய 30 போட்டிகளில், 24 வெற்றி, 2 "சமனிலை", 4 தோல்வி என 74 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. முதலிடத்தில் அல்-ஹிலால் (83 புள்ளி) உள்ளது. (7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025

## வருமானம் நன்றாக இருக்கும்



புதனை ராசிநாதனாகக் கொண்ட மிதுன ராசி அன்பர்களே!

நீங்கள் சாதுவான தோற்றத்தைக் கொண்டவர். கிரகநிலை - லாப ஸ்தானத்தில் இருந்து விரய ஸ்தானத்திற்கு மாறுகிறார். உங்களது சுக ஸ்தானம் - ரண ருண ரோக ஸ்தானம் - அஷ்டம ஆயுள் ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஸ்ரீகுரோதி வருஷம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கிலத் திகதி 01.05. 2024 அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன்கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுப நாமயோகமும் - பவ கரணமும் - சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் - மாலை 05.01-இற்கு துலாம் லக்னத்தில் குரு பகவான் மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு மாறுகிறார்.

**மிதுனம் ராசியினருக்கான குருப் பெயர்ச்சி பலன்கள்:**

குரு பகவானால் திட சிந்தனைகளுடன் உங்கள் குறிக்கோள்களை அடைவீர்கள். செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபட்டு நற்பெயர் வாங்குவீர்கள். உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்களுக்கு தக்க உதவிகளைச் செய்து அவர்களை உங்களுக்கு உதவியாக வைத்துக்கொள்வீர்கள். சமூகநோக்குடன் உங்களின் காரியங்களைச் செய்வீர்கள். நீண்ட நாட்களாக துன்புறுத்தி வந்த உடல் உபாதைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

வருமானம் சீராக இருக்கும். செய்தொழில் நன்றாக நடப்பதால் புதிய கடன்கள் வாங்க நேரிடாது. சிலருக்கு வேறு இடங்களுக்கு சென்று வசிக்கும் நிலைமை உண்டாகும். பிறரின் பொறாமைகளுக்கும், போட்டிக்கும் ஆளாக நேரிடும் என்பதால் கவனம் தேவை. நீங்கள் தொடுத்திருந்த வழக்குகளில் சாதகமான திருப்பங்கள் ஏற்படாது. மற்றபடி வெகுதூரத்திலிருந்து நல்ல செய்தி உங்களைத் தேடி வரும். மேலும் அவசியமான விடயங்களுக்காக திடீரென்று அவசரப் பயணங்களைச் செய்ய நேரிடும்.

குடும்பத்தில் சாதகமான சூழ்நிலை நிலவும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உற்றார் உறவினர்களிடையே உங்களின் செல்வாக்கு உயரும். உங்களின் பேச்சில் பொறுமையும் நிதானமும் இருக்கும். நினைத்த எண்ணங்கள் கச்சிதமாக செயல்வடிவம் பெறும். கடினமான விடயங்களிலும் தொலை நோக்குப் பார்வையுடன் செயற்படுவீர்கள். உங்களைப் பற்றி அவதூறு பேசுபவர்களை இனம்கண்டு விலக்குவீர்கள். உற்றார், உறவினர்கள் உங்கள் பேச்சுக்கு ஒத்துழைப்பு கொடுப்பார்கள். சமுதாயத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். குறைந்த அளவுக்கு முதலீடு செய்து விருப்பமான வாகனங்களை வாங்குவீர்கள். பெற்றோர் வழியில் ஏற்பட்ட மனத்தாங்கல்கள் நீங்கும்.

உங்களின் நேர்மையான போக்கை அனைவரும் பாராட்டுவார்கள். உங்களின் சூட்சும அறிவு வேலை செய்யத் தொடங்கும். எதிர்பாராத வகையில் சௌபாக்கியங்கள் தேடிவரும். உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் உடனுக்குடன் நிறைவேறும். வங்கிகளிலிருந்து எதிர்பார்த்த கடன் கிடைக்கும். நெடுநாட்களாக கிடப்பில் போடப்பட்டிருந்த உங்கள் விண்ணப்பம் அரசாங்கத்தால் சாதகமாக பரிசீலிக்கப்படும். இதனால் சலுகைகள் கிடைக்கும். மனதிற்கினிய பயணங்களையும் மேற்கொள்வீர்கள்.

உத்தியோகத்தர்கள் அலுவலக வேலைகளைத் திட்டமிட்டு முன்கூட்டியே செய்யவும். சில நேரங்களில் இடையூறுகளை சந்திக்க நேரிடும். அதேசமயம் பணவரவுக்குத் தடைகள் வராது. எதிர்பார்த்த ஊதிய உயர்வு சரியான நேரத்தில் வந்து சேரும். ஆனாலும் மேலதிகாரிகளின் ஆதரவு குறையும். வியாபாரிகள் விற்பனைப் பிரதிநிதிகளால் வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். கொடுக்கல், வாங்கல் விடயங்கள் நன்றாகவே நடக்கும். கடன்களைப் பெற்று கடையைச் சீரமைப்பீர்கள். புதிய சந்தைகளில் உங்கள் பொருட்கள் விற்பனையாகும்.

அரசியல்வாதிகள் வெற்றிகளைப் பெறுவதில் சிரமம் ஏற்படும், ஆகவே உங்கள் திட்டங்களைப் பொறுமையாக செயற்படுத்தவும். அதேநேரத்தில் தொண்டர்களின் ஆதரவு நன்றாக இருக்கும். சில சமயங்களில் உங்கள் கருத்துகள் தவறாகப் புரிந்துகொள்ளப்படலாம். எனவே யாரிடமும் மனம் திறந்து பேசவேண்டாம்.




கலைத்துறையினர் வெற்றி மேல் வெற்றி காண்பீர்கள். புதிய ஒப்பந்தங்களைச் செய்து நல்ல வருமானத்தைக் காண்பீர்கள். சககலைஞர்களால் பாராட்டப்படுவீர்கள். ரசிகர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்துவீர்கள்.

பெண்மணிகளுக்கு கணவரிடம் ஒற்றுமை அதிகரிக்கும். பணவரவு சீராக இருக்கும். அதேசமயம் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சூடான வார்த்தைகளைப் பேச வேண்டாம். மாணவமணிகள் படிப்பில் முன்னேற்றம் அடைவீர்கள். விளையாட்டுகளில் ஈடுபட்டு உடல் ஆரோக்கியத்தை வளர்த்துக்கொள்வீர்கள். அதேநேரம் பெற்றோரின் ஆதரவு குறையும்.

**மிருகசீரிடம் 3, 4 பாதங்கள்:**

இந்த குரு பெயர்ச்சியின் மூலம் லாபம் அதிகரிக்கும். பணியாட்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சுக்கிரன் சஞ்சாரத்தால் இலக்கியத் துறைகளில் உள்ளவர்களுக்கு புகழ் கிடைக்கும். பங்குதாரர்கள் மூலம் சில தொந்தரவுகள் நேரிடலாம். விற்பனைத் தொழில் செய்வோருக்கு லாபம் அதிகரிக்கும். தங்கள் தொழிலை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் புதிய உக்திகளைக் கையாண்டு தொழிலில் முன்னேறுவீர்கள். உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். உதவிகளின் மூலம் வெற்றி காண்பீர்கள்.

திருவாதிரை: இந்த குருப் பெயர்ச்சியின் மூலம் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். தாங்கள் மேன்மையடைந்திட புதிய வாய்ப்புகள் வந்து சேரும். வெளிநாடு வாய்ப்புகள் வரலாம். பூமி சம்பந்தமான துறைகளில் இருப்பவர்களுக்கு வாய்ப்புகள் குவியும். வீண் அலைச்சல் ஏற்படலாம். வாழ்க்கையில் முன்னேற்றம் காணப்படும். கிடைத்த வாய்ப்பை தவறவிடாமல் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எதிலும் சாதகமான பலன்கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனதிருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்திசாதுரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்பு கூடும்.

புனர்பூசம் - 1, 2, 3 பாதங்கள்: இந்த குரு பெயர்ச்சியால் பாராட்டு கிடைக்கும். மனக்கவலை ஏற்படும். உடல் சோர்வு உண்டாகும். ஆன்மீக நாட்டமும், மன தைரியமும் உங்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். புதிய ஓடர்கள் கிடைக்க கூடிய சூழ்நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயற்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். புதிய பதவி அல்லது பொறுப்புகள் கிடைக்கும். சாதகமாக பயன்படுத்தி முன்னேறுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை வரும். குழந்தைகள் உற்சாகமாகக் காணப்படுவார்கள்.

**பரிகாரம்:** புதன்கிழமை தோறும் அருகிலிருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்று 6 முறை வலம் வரவும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தாய் தந்தையரின் உடல்நலம் சிறக்கும்.

**சிறப்பு பரிகாரம்:** துளசியை பறித்து அருகிலிருக்கும் பெருமாள் கோயிலுக்கு அர்ப்பணித்து வணங்கவும்.

**சொல்ல வேண்டிய மந்திரம்:** "ஓம் நமோ நாராயணாய" என்ற மந்திரத்தை தினமும் 11 முறை சொல்லவும்.

**அதிஷ்ட எண்கள்:** 2, 5, 6 ;
**அதிஷ்ட ஹோரைகள்:** சந்திரன், புதன், சுக்கிரன் ;

**அதிஷ்ட திசைகள்:** மேற்கு, வடக்கு

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வெள்ளி

(தொடரும்)

# இராசிபலன்

07.05. 2024
சித்திரை 24, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 11.20 மணிவரை

அச்சுவினி பிற்பகல் 3.24 மணிவரை
சுபநேரம் 10.25-11.55 மணிவரை
இராகுகாலம் 2.55-4.25 மணிவரை

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம்
மகம், பூரம்.

வளவன்




வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றி மறையும், நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்,போசன சுகமுண்டு.




ஆதாயம் இல்லாத அலைச்சல் ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்,சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




உறவினர் பகை மாறும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், சொத்துப் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.




உறவினர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




இல்லத்தில் உள்ளவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போட்டிகளில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான நாள்.




பொன்னான எதிர்காலம் அமைய புதிய வழியைக் கையாள்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், வீட்டை அபிவிருத்தி செய்வதில் ஆர்வம் கூடும்.




பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,சுப செய்திகள் வந்து சேரலாம்.




சமுதாயப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு,உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.




மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்,தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்க்கமும் நரகமும் உன் இதயத்தில் இருக்கிறது.



திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதஷி அம்மன் சமேத ஸ்ரீ காயா ரோஹணேஸ்வர சுவாமி ஆலய பஞ்சரத தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

# தமிழ்த்தரப்பினரது ஒற்றுமையை வெளிப்படுத்த ஜனாதிபதித் தேர்தல் சிறந்த தருணம்

## கருணாகரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் தங்களது ஒற்றுமையை காட்டுவதற்கு இந்த ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி முறைமை வந்து ஆறு ஜனாதிபதிகள் மக்களால் தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றார்கள். இந்த 6 ஜனாதிபதிகளில் தமிழ் மக்கள் விரும்பி இரண்டு ஜனாதிபதிகளை கொண்டு வந்திருந்தோம். அவர்கள் எங்களுக்கு எதுவுமே செய்யவில்லை. எங்களது இனப்பிரச்சினையின் தீர்வுக்காக எதுவுமே செய்யவில்லை.

இன்னும் நாங்கள் இந்த சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் என்று வாக்களித்து ஏமாறாமல் எங்களது ஒற்றுமையை நாங்கள் காட்ட வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது.


வடகிழக்கைச் சேர்ந்த தமிழ் தேசிய கட்சிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், புலம்பெயர் தேசத்தில் இருக்கும் தமிழ் நலன் விரும்பிகள் என நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்தால் எந்த ஒரு வேட்பாளருக்கும் 50 வீதத்துக்கு மேலே வாக்கெடுத்து வெல்ல முடியாத சூழ்நிலை உருவாகும் என்கின்ற நேரத்திலே சில வேளைகளில் எங்களுடன் பேசலாம்.

அதனால் ஒரு பொது வேட்பாளர் தற்போதைய நிலைமையில் தேவைப்பாடாக இருக்கின்றது. அந்த வகையில் அனைத்து தமிழ் கட்சிகளும் வந்திருக்கின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சி பொது வேட்பாளர் தொடர்பில் தங்களுக்குள் ஒரு முடிவு எடுப்பதற்கு இரண்டு கிழமை அவகாசம் கேட்டிருக்கின்றார்கள். அவர்களும் ஒரு நல்ல முடிவு எடுப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன் இந்த வகையில் தமிழர்கள் தங்களது ஒற்றுமையைக் காட்டுவதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தலை நாங்கள் பயன்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-6)

# வீடொன்றில் மறைத்து வைத்திருந்த 30 கிலோ கஞ்சா மீட்பு

## இருவர் கைது



(தருமபுரம்)

30 கிலோ 500 கிராம் நிறையுடைய கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் பொலிஸாரால் கைது.

வவுனியா பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக நேற்று முன்தினம் இரவு யாழ்.வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் சோதனையிட்ட வேளை மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். வவுனியா பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி றிஸ்வி தலைமையிலான குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்ததோடு சந்தேக நபர்களை மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் முன்னெடுத்து வருவதோடு இரு நபர்களையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-250-316)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையின் 101 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் சபை ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சபையின் ஆயுட்கால அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கூட்டத்திற்கான ஆவண்ங்கள் கிடைக்கப் பெறாவிட்டால் அதனை சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என செயலாளர் அறிவித்துள்ளர். (நி-6)

# உதைபந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் கீரிமலை சிவானந்தா விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட "யாழின்" "துருவம்" உதைபந்தாட்ட தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3.45 மணிக்கு ஈவினை கலைமகள் அணியை எதிர்த்து திருநெல்வேலி ஒலிம்பிக் அணியும், மாலை 4.45 மணிக்கு துணவி சென்ஸ்ரார் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும் மோதவுள்ளன. (நி-6-90)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமான நிலையில் பதினெட்டுத் தினங்கள் உற்சவங்கள் இடம் பெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

# நாவல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளரும், ஊடகவியலாளருமான அலெக்ஸ் பரந்தாமனின் "கடலலைகளை மேவிய கதை" நாவல் வெளியீட்டு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர்கூடத்தில் எழுத்தாளரும், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான மு.அநாதரட்சகன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (நி-6)

# நெல்லியடியில் விபத்து பெண்ணொருவர் காயம்

(கரணவாய்)

நெல்லியடி பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டி விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த விபத்துச் சம்பவித்துள்ளது. அப்பகுதியில் நின்ற இளைஞர்கள் காயங்களுக்குள்ளான பெண்ணை பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-60)

# சந்நிதியிலிருந்து கதிர்காம பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

சைவசமய சிவனடி திருநீற்றுச் சித்தர் நா.க.சி.கணபதி கதிரவேல் (ஜே.பி) தலைமையிலான முருகபக்தர்கள், சிவனடியார்கள் குழு சரவணை ஸ்ரீ செல்லக் கதிர்காமம் பொன்னித் திருத்தலத்திலிருந்து செல்வச்சந்நிதிக்கு கிரிவலம் வந்து அங்கு இருந்து கதிர்காமத்தை நோக்கி எதிர்வரும் 11 ஆம் திகதி பாதயாத்திரை முன்னெடுக்கப்படவுள்ளது. (நி-6)



நல்லூர் அரசடி செல்லப்பிள்ளையார் ஆலய சப்பைரதத் திருவிழா நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)



துன்னாலை கோவிற்கடவை சித்திவிநாயகார் முன்பள்ளியின் கலை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. (படம்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர் பற்றாக்குறையால்

# திணறும் தொல்பொருள் திணைக்களம்

(கொழும்பு)

**ஊழியர் பற்றாக்குறையால் தொல்பொருள் திணைக்களம் தற்போது பெரும் சிரமங்களை சந்தித்து வருவதாக தொல்லியல் துறை இயக்குநர் பேராசிரியர் துசித மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.**

அதேவேளை, தொல்பொருள் திணைக்களத்தை சீராக நடத்துவதற்கு 4 ஆயிரத்து 316 ஊழியர்கள் தேவைப்படுகின்றனர்.

ஆனால், 2 ஆயிரத்து 757 ஊழியர்களே தற்போது பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆயிரத்து 559 ஊழியர்களுக்கு பற்றாக் குறை நிலவுகிறது.

தொல்பொருள் விடயங்கள் தொடர்பில் சில ஊடகங்களில் சில சந்தர்ப்பங்களில் வெளி வரும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை. சில சிக்கல்கள் இருப்பினும்கூட அதிகளவிலான தொல்பொருள் இடங்களை அழிந்து விட இடமளிப்பதாக முன் வைக்கும் குற்றச்சாட்டுகளை நாம் ஏற்க முடியாது என அவர் தெரிவித்தார். (நி-6)

## தொழில்முனைவோரை ஊக்குவிக்க டேவிட் பீரிஸ் குழுமம் துணைநிற்கும்




(யாழ்ப்பாணம்)

வடக்கின் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு, டேவிட் பீரிஸ் குழுமத்தின் துணை நிறுவனமான டிபி இன்ஃபோடெக் நிறுவனம் தயாராக இருப்பதாக டேவிட் பீரிஸ் குழுமத் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ரோஹன திசாநாயக்க தெரிவித்தார்.

யாழ்.இல 61. பலாலி வீதி எனும் முகவரியில் உள்ள DPMC பிராந்திய அலுவலக வளாகத்தில் டிபி இன்ஃபோடெக்கை திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

புதுமை மற்றும் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் ஆற்றல் வாய்ந்த பணிச் சூழலை உருவாக்கு வது எமது நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கு எடுத்துக்காட்டாக அமையும் வகையிலான DPIN இன் மாற்றத்தை இந்த நிலையம்பிரதிபலிக்கின்றது.

வடக்கு அபிவிருத்தித் திட்டத்தின் ஓர் அங்கமாகவே இது அமைந்துள்ள நிலையில் முற்போக்கான நாட்டை உருவாக்கவும், வளர்ப்பதற்கும் உதவும் வகையில் உள்ளூர் சமூகங்களின் உண்மையான திறனை அடைவதற்கு வாய்ப்புகளை உருவாக்கி அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதில் யாழ்.பல்கலைக்கழகத்தையும் இணைத்து முன்னோக்கி செல்வோம் என்று நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என தெரிவித்தார். (நி-6-33)

## காணாமல் போனோர் அலுவலகம்

# பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

காணாமற்போனோர் அலு வலகத்தில் தற்போது உள்ள வெற்றிடங்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்காக தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரும் நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

அதற்கான விண்ணப்பங்கள் www. parliament.lk எனும் பாராளுமன்ற இணையத்தளத்தில் காணாமற் போனோர் அலுவலகத்திற்கான உறுப்பினர்கள் நியமனம் என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்க ளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, மே மாதம் 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பாராளுமன்ற இணையத்தளத் தில் வெளியிடப்பட்ட வடிவத்தின் படி தயாரிக் கப்பட்டு பூர்த்தி செய் யப்பட வேண்டும்.

தொடர்புடைய விண்ணப்பங்கள் அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம், அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம், இலங்கைப் பாராளுமன்றம், ஶ்ரீ ஜயவர்தனபுர கோட்டே எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது const itutionalcouncil@parlia ment.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண் டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாகக் 'காணாமற்போன ஆட்கள் பற்றிய அலு வலகத்திற்கான உறுப்பினர்கள் நியமனம்' எனக் குறிப்பிடப்பட்ட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை. (669)

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

## உக்கலடையும் திண்மக்கழிவுகள் (தாவரக்கழிவுகள் - சருகு) ஏல விற்பனை அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சிமன்றத்தினால் சேகரிக்கப்பட்ட உக்கலடையும் திண்மக் கழிவுகள் (தாவரக்கழிவுகள்-சருகு) ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. குறித்த தாவரக் கழிவுகளை-சருகுகளை பெற்றுக்கொள்ள விரும்பும் எவரும் ஏலத்தில் பங்குபற்றலாம்.

ஏலத்தில் பங்குபற்றவிரும்புவர்கள் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் 2024.05.21ஆம் திகதி காலை 09.30 மணிக்கு முன்னர் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பு தொகையாகிய ரூபா 500.00 இனைச் செலுத்தி தமது பதிவினை மேற்கொள்ள வேண்டும். ஏலத்தில் சித்தி பெறுபவர் செலுத்த வேண்டிய முழுத்தொகையினையும் செலுத்தி அன்றைய தினத்திலேயே தாவரக் கழிவுகளை சருகுகளை முழுமையாக அகற்றுதல் வேண்டும்.

ஏல விற்பனை தொடர்பான விபரங்கள்

காலம் :- 2024.05.21 (செவ்வாய்க்கிழமை)
நேரம் :- காலை 10.00 மணி
இடம் :- தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு அருகில் உள்ள சாவகச்சேரி நகராட்சி மன்றத் தால் திண்மக்கழிவுகள் களஞ்சியப்படுத்துமிடம் (பீலிசறு)
அளவு :- 262 கன அடி (262 cube) அண்ணளவாக - ஏறத்தாழ 130 உழவியந்திர சுமைகள்

ஆரம்ப விலை நிர்ணயிக்கும் முறை :- Tractor 1 loard (பெட்டி மட்டத்திலிருந்து தட்டி /தகரம் வைத்து ஏற்றுதல் ( பெட்டியின் மேல் விளிம்பு மட்டத்திலிருந்து ஆகக்கூடிய உயரம் 03' (அடி))

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி**

(சி-0297)

செல்வம் பொங்கிடும் அட்ஷய திருதியை நன்னாளில்
சகல சௌபாக்கியங்களும் பெற்று தரும் விஷேஷ தினத்தில்
எங்களுடன் கொண்டாட பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களை
அகமகிழ்வுடன் அழைக்கின்றோம்.

**மயூரன்ஸ் நகைமாளிகை**



அட்ஷய திருதியை தினமாகிய
10.05.2024 அன்று
சிறப்பு விலைக் கழிவுகளும்
பெறுமதிமிக்க பரிசில்களும்
உங்களுக்காக
காத்திருக்கின்றன என்பதை
அறியத் தருவதையிட்டு அக
மகிழ்கிறோம்.




(சி-0294)

இல. 07, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 3015,
077 651 0251.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பிரபல டைட்டானிக் நடிகர் பெர்னார்ட் ஹில் மரணம்

### சோகத்தில் ஹாலிவுட்



(வோஷிங்டன்)

பிரபல ஹொலிவுட் நடிகர் பெர்னார்ட் ஹில் உடல்நலக்குறைவு காரணமாக நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

உடல்நலக்குறைவு காரணமாக 79 ஆவது வயதில் பெர்னார்ட் ஹில் உயிரிழந்துள்ளதாக டைட்டானிக் படத்தில் இவருடன் நடித்த பார்பரா டிக்சன் தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

உலகளவில் மிகவும் பிரபலமான திரைப்படமான டைட்டானிக்கில் கப்டன் எட்வார்ட் ஜான் ஸ்மித் என்ற கதாபாத்திரத்தில் நடித்து புகழ்பெற்றவர் பெர்னார்ட் ஹில். தி லார்ட் ஆஃப் தி ரிங்ஸ் மற்றும் பல்வேறு படங்களிலும் நடித்துள்ளார்.

இந்த நிலையில், பெர்னார்ட் ஹில் உயிரிழந்தமை ஹொலிவுட் திரையுலகில்மாத்திரமின்றி உலகம் முழுவதுமுள்ள அவரது ரசிகர்களை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. (நி-6)

## இஸ்ரேலில் அல்ஜசீராவி...

## தடை விதித்த நெதன்...

**(ஜெருசலேம்)**

**இஸ்ரேலில், அல்ஜசீராவின் ஊடக பணிகளுக்கு, பெஞ்சமின் நெதன்யாகு அரசாங்கம் தடைவிதித்துள்ளது.**



இஸ்ரேலின் உள்நாட்டு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் பதிவிட்டதால் 'அல் ஜசீரா' செய்தி நிறுவனத்துக்கு இஸ்ரேல் தடை விதித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கட்டார் நாட்டு செய்தி நிறுவனமான அல்ஜசீராவின், ஊடக செயற்பாடுகளை, இஸ்ரேலில் முடிவுக்கு கொண்டுவருவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக இஸ்ரேல் பிரதமர்

பெ...
துள்...
படி...
நிறு...
வெ...
யா...
ஜெ...
வே...
அ...
ரே...
நட...
டுள்...
ண...
ளன...
செ...
அ...
தன...
யிட்...
அர...
பதி...
இஸ...
செய...

## மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு இன்று

(டில்லி)

இந்தியாவில் மக்களவைத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெற்றுவரும் நிலையில் முதல் இரண்டு தேர்தல்கள் நிறைவடைந்துள்ளதுடன், இன்று மூன்றாம் கட்டத்தேர்தல் நடைபெறவுள்ளது.

அதன்படி, மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 93 தொகுதிகளிலும் நேற்றுடன் பிரசார நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துள்ளது.

குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா உட்பட 11 மாநிலங்களில் இன்று வாக்குப்பதிவுகள் இடம்பெறவுள்ளது.

இதில் குஜராத்தில் உள்ள 26 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

குஜராத் மாநிலத்தில் சூரத் தொகுதியில் எதிர்த்து போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் வாபஸ் பெற்றதால், பாஜக வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளதுடன், மீதமுள்ள 25 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## டில்லியைத் தொடர்ந்து குஜராத் பாடசாலைகளுக்கும் மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல்

(டில்லி)

டில்லியைத் தொடர்ந்து குஜராத் மாநிலத்தின் அகமதாபாத்தில் உள்ள பல்வேறு பள்ளிகளுக்கும் மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.


நாட்டில் உள்ள விமான நிலையங்கள் மற்றும் வணிக வளாகங்களில்குண்டு வைத்திருப்பதாக சில நாட்களுக்கு முன்பு மின்னஞ்சல் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த வாரம் டில்லியில் உள்ள பள்ளிகளில் குண்டு வைத்திருப்பதாக சுமார் 200 பள்ளிகளுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டது.

இந்நிலையில் குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரில் உள்ள பள்ளிகளுக்கு நேற்று மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக டில்லி பள்ளிகளுக்கு வந்த மிரட்டல் புரளி எனவும், ரஷ்யாவில் இருந்து இந்த மின்னஞ்சல்-அனுப்பப்பட்டது என கண்டறியப்பட்டது. அதுபோல் அகமதாபாத் பள்ளிகளுக்கு வந்த மிரட்டலும் போலியா என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும் வெடிகுண்டு புரளியால் பெற்றோர் கலக்கம் அடைந்து பள்ளிகளுக்கு வந்ததால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (நி-6)

## பூமியில் ஒரு உயிரினம்...

## மொத்தமாக அழிந்துவிடும் எச்...



(டில்லி)

பூமியில் மனிதன், விலங்குகள் உள்ளிட்ட உயிரினமும் வாழ முடியாத நிலை ஏற்பட்டு பூமி மொத்தமாக அழியப்போவதாக விஞ்ஞானிகள் அதிர்ச்சி அளிக்கும் தகவலை தெரிவித்துள்ளனர்.

அதாவது டில்லி மெயில் அறிக்கையின்படி, பிரிஸ்ட்ல் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் கணனி உருவகப்படுத்துதல் தொழில்நுட்பத்தின் மூலம் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர்.

அதில் இன்னும் 250 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு பூமியில் பேரழிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானிகள் கூற்றுப்படி பூமியில் மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும் மறைந்துவிடும் அந்த நேரத்தில் பூமியின் வெப்பநிலை 70 டிகிரி செல்சியஸை எட்டும் அத்தகைய சூழலில் பூமியில் எந்த உயிரினமும் வாழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வின் ஊடகப்பணிகளுக்கு
# ...ன்யாகு அரசாங்கம்

பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானத்தின் படி அல்ஜசீராவின் ஒளிபரப்புகள் நிறுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த அறிவிப்புகள் வெளியான சில மணிநேரங்களில் ஜெருசலேத்தின் அம்பாசடர் ஹோட்டலிலுள்ள அல்ஜசீரா அலுவலகத்திற்கு சென்ற இஸ்ரேலிய பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் ஒளிபரப்பு உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இது குறித்து, அந்நாட்டின் செய்தி விவகாரங்கள் துறை அமைச்சர் ஷ்லோமோ கார்ஹி தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இஸ்ரேல் அரசுக்கு எதிராகத் தூண்டும் பதிவுகளைப் பரப்பும் எவரும் இஸ்ரேலில் இருந்து ஒளிபரப்பு செய்ய முடியாது என தெரிவித்துள்ளார்.



இந்நிலையில், இஸ்ரேலின் உள்நாட்டு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் பதிவிட்டால், அமைச்சரவை மூலம் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு ஊடகங்களை தடை செய்ய அதிகாரமளிக்கும் சட்டம் அந்நாட்டு பாராளுமன்றத்தால் கடந்த ஏப்ரலில் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது இந்த முடிவை அந்நாட்டு அரசு எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

...யாது ...ற்ப ...ால் ...னத் ...துள் ...கள் ...திறு ...டக ...பில் ...ற்கு ...ழங் ...மர்

# நேட்டோவுக்கு எதிராக உருவாகும் கூட்டணி
## வலுக்கும் சிக்கல்

(மொஸ்கோ)

நேட்டோ படைக்கு, மாற்றாக மற்றொரு அமைப்பை உருவாக்க ரஷ்யா, சீனா, ஈரான என மூன்று நாடுகளும் கை கோர்த்துள்ளதாக பிரிட்டன் உளவுத்துறையான எம்ஐ 15 உறுதி செய்திருக்கிறது.

சோவியத் காலத்தில் அதற்கு போட்டியாக நேட்டோ உருவாக்கப்பட்டது, ஆனால் சோவியத் உடைந்து 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட இன்னமும் நேட்டோ விரிவடைந்து கொண்டே இருக்கிறது. இது தான் ரஷ்யா-உக்ரைன் போருக்கான தொடக்கப் புள்ளியாகவும் அமைந்தது.

இப்படி இருக்கும் பட்சத்தில் ரஷ்யா-உக்ரைன் போரை சீனா தூண்டி விடுவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் அண்டனி பிளிங்கன் குற்றம் சாட்டியிருந்தார், அதாவது ரஷ்யாவுக்கு சீனா உதவி செய்வதாகவும் அதன் மூலம் போர் தொடர்ந்து வருவதாகவும் பிளிங்கன் கூறியிருக்கிறார்.

இந்தக் கருத்தைத் தொடர்ந்து ஒட்டுமொத்த மேற்கு உலக நாடுகளும் சீனா, ரஷ்யாவுக்கு எதிராக திரும்பி இருக்கும் நிலையில், தற்போது ரஷ்யா, சீனா, ஈரான் ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து புதிய இராணுவ கூட்டணியை உருவாக்க திட்டமிட்டிருக்கின்றன.

இதற்கிடையே, சீனாவுக்கு அமெரிக்கா தொடர்ந்து வர்த்தக நெருக்கடியை கொடுத்து வருகிறது. சீனாவின் பெரும்பாலான பொருட்கள் அமெரிக்காவிலும், அமெரிக்க ஆதரவு நாடுகளிலும் விற்க தடை செய்யப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக இணையம் தொடர்பான சேவைகளை அமெரிக்க முடக்க முயன்று வருகிறது. அதேபோல டிக்டொக் செயலிலை முற்றிலுமாக முடக்க திட்டமிட்டிருக்கிறது அமெரிக்கா. அதே போல் ஈரான் விவகாரத்திலும் அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஒரே அணியில் நிற்கின்றன.

எனவே இந்த ரஷ்யா, சீனா, ஈரான் ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து புதிய இராணுவக் கூட்டணியை உருவாக்க திட்டமிட்டுள்ளன. இது அமெரிக்காவிற்கும் நேட்டோ அமைப்பிலுள்ள நாடுகளுக்கும் பேரிடியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ...னம் கூட மிச்சமில்லாமல்
# ...ம் எச்சரிக்கும் விஞ்ஞானிகள்

...னர். ...0 மில்லி ...பிறகு பூமி ...வாய்ப்புள் ...டுள்ளது. ...பூமியில் ...னைத்து ...ந்துவிடும் ...ன் வெப்ப ...சியஸை ...லில் பூமி ...ம் வாழ

இயலாது அனைத்தும் வெப்பத்தின் காரணமாக அழிந்து விடும்.

பூமியில் நாம் கார்பனை வெளியேற்றும் வேகத்தின் காரணமாக இந்த அழிவு விரைவில் நிகழ வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இதேபோல நிகழ்ந்திருக்கலாம் என்றும் அதன் காரணமாக டைனோசர்கள் அழிந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த ஆய்வுக் குழுவின் தலைவர் அலெக்சாண்டர் ஃபார்ன்ஸ்வொர்த் கூறுகையில், உலகில் கார்பன் டை ஆக்சைட்டின் அளவு இப்போது இருப்பதை விட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கலாம். இதன் காரணமாக உடல் வெப்பமடைந்து மனிதர்கள் இறந்து போகும் சூழல் உருவாகும்.

பின்னர் பூமியின் அனைத்து கண்டங்களும் ஒன்றிணைந்து ஒரு சூப்பர் கண்டத்தை உருவாக்கும். அது பாங்கேயா அல்டிமா என்று அழைக்கப்படுகிறது.


குறிப்பாக பூமி முதலில் சூடாகவும், பின்னர் வறண்டதாகவும், இறுதியாக வாழத்தகுதியற்றதாகவும் மாறும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அதுமட்டுமன்றி வெப்பம் தாங்காமல் எரிமலைகள் வெடித்து சிதறி பூமியின் பெரும்பகுதி எரிமலையால் மூடப்பட்டிருக்கும்.

மேலும் அவ்வாறு நிகழும் போது அது அதிக அளவு கார்பன் டை ஆக்சைடை வெளியிடும். அதனால் மக்கள் சுவாசிக்க சிரமப்படுவார்கள்.

அதன்பிறகு படிப்படியாக பூமியில் ஒரு உயிரினம் கூட மிச்சமில்லாமல் மொத்தமாக அழிந்து விடும் எனவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். (நி-6)

# ரஃபாவில் இருந்து மக்களை உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவு




(இஸ்ரேல்)

ரஃபாவின் கிழக்கு பகுதியில் வசிக்கும் மககளை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

எதிர்காலத்தில் ரபாவில் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கைகளை தீவிரப் படுத்தலாம் என இஸ்ரே லியப் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்த மறுநாள் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

உங்களின் பாதுகாப்பிற்காக சோதனைச் சாவடிகளிற்கு அருகில் உள்ள மனி தாபிமான பகுதிக்கு உட னடியாக செல்லுமாறு கேட் டுக்கொள்கின்றோம் என இஸ்ரேலிய இராணுவத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் மட்டுப்படுத்த அளவிலான நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக இஸ் ரேலிய இராணுவத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒக்டோபர் ஏழாம் திகதிக்கு பின்னர் இடம்பெயர்ந்த மில்லியன் கணக்கான மக்கள் எகிப்து எல்லையில் உள்ள ரபாவில் தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை எழுதச் சென்ற மாணவன் பரிதாபமாக உயிரிழப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதச் சென்ற மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பலாங்கொடை - மார தென்னப்பகுதியில் இந்த துயரச் சம்பவம் நேற்று இடம் பெற்று ள்ளது.

2023 ஆம் கல்வியாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட் சைகள் நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமாகின.

இந்நிலையில், பரீட்சை எழுதச் சென்ற குறித்த மாணவன் அப்பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுவிட்டு திரும்பிய நிலையில் தவறி கீழே விழுந்து உயிரிழந்து ள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். மேலும் உயிரிழந்த மாணவனின் பிரேத பரிசோதனை மாரதென்ன பிரதேச வைத்தியசாலையில் இடம் பெற்று வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (நி-6)

# தாக்கிய நபரை கைது செய்யக் கோரி போராட்டம்



(குருமண்காடு)

வவுனியா, புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் முன்னிலையில் தாக்கிய நபரை கைது செய்யுமாறு கோரி வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் முன்பாக நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பாக 10 பேரை அழைத்து பேசியிருந்தார். இதன்போது பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கிய வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நபரை 3 தினங்களுக்குள் கைது செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததுடன், குறித்த சம்பவத்துடன் சம்மந்தப்பட்ட பொலிஸார் மீதும் விசாரணை மேற்கொள்ளப்படும் என தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-250)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 120 | 120-150 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 160 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 80 | 60-70 | 120 |
| தக்காளி | 160 | 130 | 140 | 100-140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 120 | 160 |
| கோவா | 160 | 180 | 150 | 150 | 200 |
| கரட் | 300 | 340 | 220 | 200 | 300 |
| பூசணி | 80 | 120 | 100 | 80 | 80 |
| புடோல் | 100 | 150 | 120 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 60-70 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 320 | 250 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 350 | 300 | 250 | 200 | 300 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 200 | 400 |
| வெண்டக்காய் | 100 | 150 | 100 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | -- | 150 |
| பயற்றங்காய் | 150 | 140 | 100 | 150-200 | 100 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 300 | 300 |
| பீற்றூட் | 250 | 200 | 280 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 150 | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 700 | 650 | 500 | 300-550 | 600 |
| போஞ்சி | 200 | 350 | 350 | 380 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 150 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 50 | 40-60 | 100 |
| தேசிக்காய் | 1000 | 800 | 1000 | 800-1200 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 50 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 600 | 400 | -- | 80 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 120 | 100 | [illegible] |

# இன்று ஒரு தகவல் 116



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## விஞ்ஞானிகள்

பிரான்ஸ் நாட்டிலே ஒரு பள்ளத்தாக்கு. அங்கே பாறை மேலே ஒரு வயதானவர் அமர்ந்து இருந்தார். அதிகாலை நேரத்திலேயே இவர் அங்கே சென்று அமர்ந்து இருப்பார். அந்தப் பக்கத்திலே திராட்சைத் தோட்டங்கள் அதிகம். அந்தத் தோட்டங்களிலே வேலை செய்வதற்காக பெண்கள் எல்லாம் அந்த வழியாக போய்க் கொண்டு இருந்தார்கள். வழியிலே இந்தப் பெரியவர் அமர்ந்திருப்பதையும் பார்ப்பார்கள்.

பாவம் இந்தப் பெரியவருக்கு என்ன கஷ்டமோ தெரியவில்லை. இந்த நேரத்திலே இங்கே வந்து உட்காந்திருக்கார். என்று நினைக்கிறார்கள். இருந்தாலும் பெரியவராச்சே என்று வணக்கம் சொல்லி விட்டுப் போறாரர்கள். அவர்கள் எல்லாம் தோட்டங்களுக்குப் போய் வேலை செய்துவிட்டு வேலை முடிந்ததும் மாலை வீட்டுக்கு வருவார்கள். திரும்பி வரும் போது பார்த்தால் அப்பொழுதும் அந்தப் பெரியவர் அதே இடத்துலே உட்காந்திருக்கார். என்னத்தையோ உற்றுக் கவனித்துக்கொண்டே உட்காந்திருக்கிறார்.

ஐயோ பாவம்.. இவருக்கு என்ன ஆச்சோ தெரியவில்லையே. கடவுள் தான் இவரை காப்பாற்ற வேண்டும் என்று சொல்லிக்கொண்டே அவர்கள் எல்லாம் போறார்கள். சரி... அந்த பெரியவர் யார் என்று நினைக்கிறீர்கள். அவர் பெயர் பேபர். பூச்சியியல் மேதை. பத்து வருடம் தொடர்ந்து பூச்சிகளுடைய நடவடிக்கையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு வந்தார். இயற்கையின் இரகசியங்களை தெரிந்து கொள்வதற்காக அவர் பொறுமையாக உழைத்தார். பெரிய பெரிய உண்மை களையெல்லாம் கண்டுபிடித்தார்.

பூச்சிகளுக்கு உள்ளுணர்வு இருக்கு... பூச்சிகளோட சில நடத்தைகளிலே இருந்து அதை புரிந்து கொள்ள முடியும் என்று சொன்னார். இதையெல்லாம் ஆராய்வதற்காககத்தான் அவர் அப்படி ஒரே இடத்துலே உட்காந்திருக்க வேண் டியதாக போய்விட்டது! ஆனால் அந்த வழியாகப் போறவர்கள் எல்லாம் அவரைப் பார்த்துவிட்டு வேறே விதமாக நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். இதை எதற்கு சொல்லுகிறேன் என்றால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உண்மையைக் கண்டு பிடிப்பதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான்.

விஞ்ஞானிகள் ஒன்றைக் கண்டுபிடித்து விட்டால் உடனே கர்வம் வந்து விடுவதில்லை. தோல்வி கண்டால் துவண்டு போவதில்லை. யாராவது கேலி செய்தால் அதைக்கண்டு கொள்வதில்லை. லண்டன் நகரத்து ராயல் சங்கத்திலே ஒரு கூட்டம் நடந்துகொண்டு இருக்கிறது. ஒரு விஞ்ஞானிதான் கண்டுபிடித்த ஒன்றைப் பற்றி பேசுகிறார். ஒரு கம்பிச்சுருளுக்குள்ளே ஒரு காந்தத்தை நுழைத்தால் கம்பிச்சுருள்லே மின்னோட்டம் உண்டாகிறது என்றார். சில சோதனைகளும் செய்து காட்டுகிறார்.

கூட்டத்திலே யாருக்கும் இதிலே ஆர்வம் இல்லை. இதுமாதிரி இடங்களிலே சத்தம் போட்டால் நாகரிகமாக இருக்காது என்பதனாலே அவர்கள் பொறுமையாக சகித்துக் கொண்டு உட்காந்திருக்கார்கள். எதையாவது பேசித்தொலைக்கட்டும் என்று சொல்லி!

அந்த விஞ்ஞானி பேசி முடித்தார். கூட்டத்திலே இருந்த ஒரு அம்மா எழுந்து ஒரு கேள்வி கேட்டார்கள். அது சரிங்க... நீங்கள் இவ்வளவு தூரம் உங்கள் கண்டு பிடிப்பைப் பற்றி சொல்றீர்கள். எல்லாம் சரி நீங்கள் சொன்னது எல்லாம் உண்மை என்றே வைத்துக்கொள்வோம். அதனாலே ஜனங்களுக்கு என்ன பிரயோசனம்? என்றார் அந்த விஞ்ஞானி. அதுக்காகத் தயங்கவில்லை. உடனே பதில் சொன்னார். அம்மையாரே! புதுசா ஒரு குழந்தை பிறக்கிறது. அந்த குழந்தையினாலே ஜனங்களுக்கு என்ன பிரயோசனம் உங்களாலே சொல்ல முடியுமா என்று கனிவாக கேட்டார்.

அந்த சமயத்திலே இங்கிலாந்து நாட்டுப் பிரதமராக இருந்தவர் கிளாட்ஸ்டன்(1809-1898). சிறந்த நிர்வாகி. பெரிய அறிஞர். இருந்தாலும் அவரும் சந்தேகப்பட்டார்.அவரும் அந்த விஞ்ஞானியுடைய விரிவுரையைக் கேட்டுட்டு இதனாலே எல்லாம் ஏதாவது பலன் உண்டா? என்றுதான் கேட்டார் - அலட்சியமாக!

ஏன் இல்லை...கூடிய சீக்கிரத்திலே நீங்கள் மின்சாரத்துக்கு வரி போட்டு வருமானம் பெறக்கூடிய காலம் வரலாம்! என்றார் அந்த விஞ்ஞானி. அவர் சொன்னது பலிச்சது. இன்றைக்கு எல்லா நாடும் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. விற்கிறது. வரி போடுகிறது. ஆனால் 19ஆம் நூற்றாண்டிலே லண்டன் நகரத்து பிரமுகர்களுக்கும் பிரதமருக்கும் கூட மைக்கேல் பாரடே யின் மின் காந்த விளைவு ரொம்பவும் அற்பமான ஒரு விடயமாகத்தான் தெரிந்திருக்கு.

அதனாலே எதையும் அற்பமா நினைத்துக் கொள்ளக்கூடாது. அலட்சியமாக நினைக்கக் கூடாது. சில வீடுகளிலே இப்பவும் கூட சில குடும்பத் தலைவர்கள் ஒருமாதிரியாக இருப்பார்கள். அதைப் பார்த்துவிட்டு குடும்பத்தலைவிகள் சந்தேகப்படகூடாது. அது ஏதாவது ஆராய்ச்சியாக கூட இருக்கலாம். அவங்களுடைய ஆராய்ச்சி மனப்பான்மை வளருவதற்கு இவர்கள் தான் ஒத்தாசையாக இருக்க வேண்டும்.

ஒருவர் அப்படித்தான். நான் புதுசாக எதையாவது கண்டுபிடிக்கனும் என்று ஆசைப்படுகிறேன்! என்று வீட்டிலே சொன்னார். அந்த அம்மா..நீங்க புதுசா கண்டுபிடிக்கிறது அப்புறம் இருக்கட்டும். முதலிலே இதை கண்டுபிடிங்க! என்று சொல்லிக் கொண்டே கொஞ்சம் அரிசியை கொண்டு வந்து அவர் முன்னாடி கொட்டி இதுலே உள்ள கல்லையெல்லாம் கண்டுபிடித்து தனியா எடுங்கள் என்றார்.


அப்படி சொல்லிவிட்டு அவர்கள் கோவிலுக்குப் போய் விட்டு அரைமணி நேரம் கழித்து வந்தார்கள். இந்த ஆள் அப்படியே அசையாமல் அந்த அரிசியை கூர்ந்து கவனித்து கொண்டே உட்கார்ந்திருக்கிறார். கல்லை பொறுக்கவே இல்லே!

ஏன் இன்னும் சும்மாவே உட்காந்திருக்கிறீர்கள் என்று சத்தம் போட்டார் அந்த அம்மா. இவர் பொறுமையாக.. அதுசரி... நீ இதை இங்கே கொண்டு வந்து கொட்டி கல்லை பொறுக்க சொன்னாய்.. நானும் தயாராகத்தான் இருந்தேன். ஆனால் ஒரு விடயத்தை என்னிடம் சொல்லுவதற்கு மறந்து அவசரமாக கோயிலுக்கு போய் விட்டியே என்றார். எது என்று கேட்டார் அந்த அம்மா.

இதுலே எது கல்லு...எது அரிசி என்று என்னிடம் சொன்னியா? என்று கேட்டார் அந்த குடும்ப விஞ்ஞானி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்குத் தெண்டலுடன் ஆரம்பமான கண்ணகி அம்மன் பொங்கல் உற்சவம்



(கிளிநொச்சி)

வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தின் ஆரம்ப உற்சவமான பாக்குத்தெண்டல் உற்சவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

அந்தவகையில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தில் மடை பரவி வழிபாடுகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து. ஆலயத்துடன் பாரம்பரியமாக தொடர்புடைய குடும்பங்களிடம் சென்று பாக்குத் தெண்டல் இடம்பெற்றது.

பாக்குத்தெண்டலுக்கு சென்றவர்கள் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தினை சென்றடைந்ததும் அங்கு அம்மன் சன்னிதானத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

அந்த வகையில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை கடல்நீர் தீர்த்தம் எடுத்தல் நிகழ்வும், அதனைத் தொடர்ந்து ஏழுநாட்கள் முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் அம்மன் சன்னிதானத்தில் உப்பு நீரில் விளக்கெரியும் அற்புத நிகழ்வு இடம்பெற்று, எதிர்வரும் 19 ஆம் திகதி காட்டா விநாயகர் ஆலய பொங்கல் உற்சவம் இடம்பெற்று 20 ஆம் திகதி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# விடுவிக்கப்பட்ட மீனவர்களை அழைத்து வர நடவடிக்கை எடுக்கவேண்டும்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையம்

(மன்னார்)

இந்தியக் கடற்பரப்பில் நுழைந்த நிலையில் கைது செய்யப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்டுள்ள 5 மீனவர்களையும் நாட்டிற்கு அழைத்து வர உரிய தரப்பினர்கள் இதுவரை எவ்வித முனைப்பும் காட்டவில்லை என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தலைமன்னாரில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற 5 கடற்றொழிலாளர்கள் தமிழக கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் நடவடிக்கைகளை இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

தற்போது அங்குள்ள மீனவர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு, கடற்றொழில் அமைச்சர் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் துரித நடவடிக்கையை முன்னெடுத்து 5 பேரையும் உடனடியாக நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்தார். (நி-6-285)

# மன்னார் தேசிய பாடசாலைகளில் தொடரும் ஆசிரியர் பற்றாக்குறை

(மன்னார் )

மன்னார் மாவட்டத்தில் தொடர்சியாக தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்ற நிலையில் உயர்தர பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்கள் இன்மையால் உயர்தர கல்வி நடவடிக்கை பாதிப்படைந்துள்ளதாக மன்/புனித சவேரியார் ஆண்கள் மற்றும் பெண்கள் கல்லூரி அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் விரைவில் நடவடிக்கை மேற்கொண்டு தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிவர்த்தி செய்து தருமாறு கோரி நேற்று குறித்த பாடசாலை அதிபர்கள் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர். (நி-6-285)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3109

**நவின்**

நா இன்னேரம் கலக்ட்டர் ஆகியிருக்கனும்...



ஆகாததுக்கு காரணம் தேவயாணி இன்னும் 27 ஆகியும் வர்ல ...

**தனுசா**

விடுப்பா... விடுப்பா...



தை மாசம்னா சூரியனுக்கு நாம பொங்கல் வைக்கிறதும்...
மே மாசம்னா சூரியன் நமக்கு பொங்கல் வைக்கிறதும் சகஜம்தானே...

**கரன்**

இன்னும் ஒரு மாசம் வெய்யில்ல சுத்தினா நம்ம கதியும் இதுதான்.



**குணா**




**தர்சிகா**




**குமரன்**

என்னங்க... அட்சஷயதிருதிக்கு நகை நட்டு எதனாச்சும் வாங்கி கொடுங்களேன்...



நமக்கு இருக்கிற செலவுக்கு நகை எல்லாம் வாங்க முடியாது.. வேணுனா நட்டு வாங்கி தாறேன்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook ... வை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 2
# பொன்னியின் செல்வன்
காவியத் தொடர் 474



"நீதான் மந்திரவாதியாயிற்றே?" "நன்றாகச் சொன்னாய்? மந்திரம் போட்டிருக்கிறேன் பார்! இப்போது கப்பல் அசையாமல் நிற்கிறது தெரிகிறதல்லவா? இரவுக்குள் சுழற்காற்று அடிக்கப் போகிறது. மழையும் வரும்!"

"மழை வந்தால் எனக்கு என்ன பயன்? நீங்கள் மேல் தட்டில் இருப்பீர்கள்! நான் இங்கே"

"நீயும் மேல் தட்டுக்கு வரலாம். நாக்கை நீட்டி நீர் அருந்தி தாகத்தைப் போக்கிக் கொள்ளலாம். நாங்கள் சொல்கிறபடி கேட்பதாயிருந்தால்."

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"அந்த அராபியப் பிசாசுகளைச் சமுத்திர ராஜனுக்குப் பலி கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம்."

"ஏன்?"

"அவர்கள் கலிங்க நாட்டுக்கு இந்தக் கப்பலைக் கொண்டு போக வேண்டும் என்கிறார்கள். நாங்கள் கோடிக்கரையிலாவது நாகப்பட்டினத்திலாவது இறங்க வேண்டும் என்கிறோம்."

"அவர்கள் ஆறு பேர் அதோடு பெரும் முரடர்களாயிருக்கிறார்களே?"

"அவர்களில் மூன்று பேர் தூங்குகிறார்கள் மற்ற மூன்று பேர் உறங்கி வழிகிறார்கள். நாம் மூன்று பேரும் தூங்குகிற மூன்று பேரையும் வேலை தீர்த்துவிட்டால், அப்புறம் மூன்று பேருக்கு மூன்று பேர் சமாளிக்கலாமே?" வந்தியத்தேவன் சும்மாயிருந்தான்.

"என்ன, தம்பி சொல்கிறாய்? எங்கள் யோசனைக்குச் சம்மதித்தால் உன் கட்டை அவிழ்த்து விடுகிறோம்."

இளவரசரின் முகம் வந்தியத்தேவன் மனக்கண் முன்னால் வந்து நின்றது. ஆம் அவர் இதை ஒப்புக்கொள்ள மாட்டார். தூங்குகிறவர்களைக் கொல்லுவதற்கு ஒரு நாளும் உடன்படமாட்டார்.

"என்னால் முடியாது தூங்குகிறவர்களைத் தாக்கிக் கொல்வது நீசத்தனம்."

"முட்டாளே! சோழ நாட்டு மாலுமிகள் தூங்கிக் கொண்டிருந்த போதுதான் இந்த அராபியர்கள் அவர்களைத் தாக்கிக் கொன்றார்கள்."

"மற்றவர்கள் இழிவான செயல் புரிந்தால் நானும் அவ்வாறு ஏன் செய்ய வேண்டும்?"

"சரி உன் இஷ்டம்!" என்றான் ரவிதாஸன். அருகில் கிடந்த ஆயுதக் கும்பலிலிருந்து ஒரு கூரிய பட்டாக் கத்தியை அவன் எடுத்துக் கொண்டான். தேவராளனோ, நுனியில் இரும்புப் பூண் கட்டியிருந்த சிறிய உலக்கை போன்ற தடியை எடுத்துக் கொண்டான்.

இருவரும் அங்கிருந்து சென்றார்கள். ஆனால் அறையின் கதவைச் சாத்தி வெளியில் தாள் போடவில்லை. அவர்கள் போன உடனே வந்தியத்தேவன் கையை நீட்டிக் கத்தி ஒன்றை எடுத்துத் தன்னைக் கட்டியிருந்த கயிறுகளை அறுத்துக்கொண்டான். குதித்து எழுந்து சென்று, மூலையில் கிடந்த தேங்காய் ஒன்றை எடுத்து உடைத்தான். இளநீரை வாயில் விட்டுக்கொண்டான். மிச்சமிருந்த தேங்காய்களை ஒரு சாக்கைப் போட்டு மூடினான்.

பிறகு, போருக்குத் தகுதியான நல்ல வாள் ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டான். எந்த நிமிஷத்திலும் வெளியில் பாய்ந்து செல்வதற்கு ஆயத்தமாயிருந்தான். கொஞ்சம் நேரத்துக்கெல்லாம் 'தட்', 'தட்' என்று இரு முறை சத்தம் கேட்டது. இரு உடல்கள் கடலில் எறியப்பட்டன என்று அறிந்து கொண்டான். உடனே பயங்கரமான பெருங்கூச்சல், கை கலப்பு, கத்திகள் மோதும் சப்தம் எல்லாம் மேல் தட்டிலிருந்து வந்தன.

வந்தியத்தேவன் கையில் பிடித்த கத்தியுடன் பாய்ந்தோடினான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## லட்சுமி கடாட்சம்!



முன்னொரு காலத்தில் மாமுனிவர் ஒருவர் காட்டில் தவம்செய்து வந்தார். சிறு வயதிலிருந்தே தவக்கோலம் பூண்டு இறைவனை தொழுது வந்ததால், அந்த காட்டில் வசித்த கொடிய மிருகங்கள் கூட அவரிடம் குழந்தைகளை போல நடந்து கொண்டன.

ஒரு நாள் அவர் முன் அழகிய பெண் ஒருத்தி தோன்றினாள். அவளது பேரழகு பிரமிக்க வைத்தது. இருப்பினும் மனம் சலனப்படாமல் அந்த அழகியைப் பார்த்து, "அம்மா நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றார்.

"நான் தான் மகாலட்சுமி என்னுடைய விதிப் பயனால் சில நாட்கள் உங்களுடன் வசிக்க வந்துள்ளேன். நீங்கள் என்னை உதறித் தள்ளினாலும் உங்களை விட்டு நான் போகமாட்டேன். பிரம்மன் கட்டளைப்படி நான் உங்களுடன் இருந்தாக வேண்டும்," என்றாள்.

மகாலட்சுமி போக மாட்டாள் என்பதை அறிந்த முனிவர் அந்த ஒப்பந்தத்திற்கு சம்மதித்தார்.

"அம்மா நீங்கள் வரும் பொழுது என்னிடம் சொல்லி கொண்டு வந்தது போல போகும் போது சொல்லி கொண்டே போக வேண்டும்," என்றார்.

லட்சுமியும் சம்மதித்தாள். அன்றிலிருந்து தன் மீது லட்சுமியின் அருள் பூரணமாக இருப்பதை அறிந்தார். அதை சோதித்துப் பார்க்க விரும்பினார் முனிவர். எனவே, காட்டை விட்டு பொற் குன்றம் என்ற மாநகரை அடைந்தார். அந்த அரண்மனையின் அரசரும் மந்திரிகளும் அமர்ந்திருந்தனர்.

வேகமாக சென்ற முனிவர் தனது இடது காலை தூக்கி மன்னனது கிரீடத்தை ஒரு உதை விட்டார். மறுநிமிடம், "அடி! உதை அவனை பிடி!" என்றபடியே ஆயிரம் சேவகர்கள் முனிவரை சூழ்ந்து கொண்டனர்.

உடனே அரசன், "முனிவரை ஒன்றும் செய்யாதீர்கள். அவர் திரிகாலமும் உணர்ந்த ஞானி. என் கிரீடத்தை பாருங்கள்," என்றான்.

கிரீடத்தில் விஷநாகம் ஒன்று படமெடுத்து கொண்டிருந்தது. உடனே எல்லாரும் மகா புருஷரை திட்டிவிட்டோமே என்று நினைத்து வருந்தினர். அதற்குள் விஷநாகம் ஓடி மறைந்தது. உண்மையில் அது விஷநாகமல்ல லட்சுமி தான் நாக உருவெடுத்து முனிவரை காப்பாற்றினாள்.

. அன்றிலிருந்து அரசன் மாமுனிவருக்கு மந்திரி பதவி கொடுத்து சர்வ அதிகாரமும் கொடுத்தான். முனிவருக்கு லட்சுமி கடாட்சம் இருந்ததால் அவர் செய்ததெல்லாம் பலித்தது. முனிவரும் நாட்டை நல்ல முறையில் ஆண்டார்.

இரண்டு வருடங்கள் ஓடின. மீண்டும் ஒரு நாள் தன்னுடன் லட்சுமி இருக்கிறாளா? என்பதை அறிய விரும்பினார் முனிவர். அன்றிரவு அரசனும், அரசியும் தூங்கிக் கொண்டிருந்த பள்ளியறைக்கு சென்றார். இருவரையும் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார்.

கண் விழித்த மன்னன் அந்த கிழவனின் தலையை வெட்டினால் என்ன என்று நினைத்து ஆத்திரம் கொண்டார். அதற்குள் பள்ளியறை கட்டடம் இடிந்து விழுந்தது. அதை பார்த்த அரசனுக்கு மாமுனிவர் மேல் அளவிடாத பாசம் வந்தது.

"முனிவரே! நீர் இல்லாவிட்டால் நாங்கள் இருவரும் இறந்திருப்போம்!"என்றான்

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஓங்கி உயர்ந்த பண்பாட்டின் விளைநிலத்தில் நடந்த அவலம்

கவலைப்படுகின்ற உரிமைக்கு மட்டுமே நாம் உரித்தானவர்களோ என்று நினைக்கு மளவுக்கு நிலைமை மிகவும் மோசமாகி வருகிறது.

ஆம், ஒவ்வொரு விடிகாலைப் பொழுதும் ஏதேனும் ஆபத்துக்கள் நடந்திருக்குமோ என்ற ஏக்கத்துடன் துயிலெழுகின்ற பரிதாபத்துக்கு நாம் ஆளாகிவிட்டோம்.

உண்மை. வீதி விபத்து, உயிர்மாய்ப்பு, கொலை, கொள்ளை, விரசம் என எங்கும் விபரீதங்கள் மலிந்து போயுள்ளன.

ஆம், கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெல்லிப்பழைப் பகுதியில் தாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

பிரஸ்தாபத் தாயின் மரணம், அவரது பதினாறு வயது மகனால் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் பொலிஸாருக்கு எழுந்துள்ளது.

அதேநேரம் குறித்த பதினாறு வயதேயான மகன் தலைமறைவாகியுள்ளமையும் இங்கு குறித்துரைக்கப்பட வேண்டிய விடயம்.

அதே சமயம், சாதாரண தரத்தில் கற்கின்ற பிரஸ்தாப மாணவனின் அறையில் எழுதப்பட்டிருந்த வாசகங்கள் பொலிஸாருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

தவிர, அந்த வாசகங்கள் குறித்த மகனே தாயைக் கொன்றிருக்கலாம் என்ற சந்தேகத்தை பொலிஸாரிடம் வலுப்படுத்தியிருந்தது.

இங்குதான் நிலைமை எப்படியாக உள்ளது என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்தாக வேண்டும்.

இலங்கைச் சட்டத்தின்படி 16 வயது என்பது சிறுவர் என்ற வகுதிக்குள் அடங்கக்கூடியது.

ஆக, ஒரு சிறுவன் தன் தாயைக் கொலை செய்கின்ற அளவுக்கு வந்துள்ளான் என்பதை ஒரு செய்தியாக நாம் கடந்து செல்வோமாயின், அங்குதான் மிக மோசமான தவறை நாம் இழைக்கின்றோம்.

அதாவது தெல்லிப்பழையில் தன் தாயைக் கொலை செய்த 16 வயது மகன் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமாகிய நிஹால் தல்துவ அவர்கள் நேற்று முன்தினம் (5) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் பிரஸ்தாபித்திருந்தார்.

அதில் தெல்லிப்பழையில், பெற்ற தாயைக் கொலை செய்த 16 வயது மகன் மொபைல் கேம்ஸுக்கு அடிமையானவர் என்றும் அதன் காரணமாக அவர் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார் என்றும் குறிப்பிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர்; சிறுவர்களிடம் கையடக்கத் தொலைபேசிகளைக் கொடுக்காதீர்கள்.

அவர்கள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும்போது பெற்றோர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

என்ன செய்வது. ஓங்கி உயர்ந்த பண்பாட்டு விழுமியத்தின் விளைநிலமாகிய யாழ்ப்பாணத்தில் இப்படியொரு துயரச் சம்பவம். அச்சம்பவத்தை இந்த நாடு முழுமைக்கும் உதாரணப்படுத்தும் அளவுக்கு நம் நிலைமை வந்துற்றது.

ஆகையால் இனியேனும் எங்கள் பிள்ளைகள், சிறுவர்கள், மாணவர்கள் தொடர்பில் நாம் மிகவும் கருசனையோடும் அவதானமாகவும் இருக்க வேண்டும்.

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை

# இல்லாதொழிக்க அரசாங்கம் முயற்சி

### ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை இல்லாதொழிக்க அரசாங்கம் முயற்சிசெய்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இலவசக் கல்வி என்பது நாட்டில் உள்ள அனைவரும் அனுபவிக்கும் ஒன்று. தொடர்ந்து 85 வருட காலமாக இந்த உரிமையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது.

அத்துடன், கஷ்டப் பிரதேசங்களில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு வரும் மாணவர்களின் வாழ்க்கையை வெற்றியடையச் செய்வதற்கு பல்கலைக்கழகத்தில் பெற்ற கல்வி பெரும் உதவியாக அமைந்திருந்தது. இந்த உரிமைக்கு இப்போது சவால் விடுக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையில் கடுமையான மாற்றங்களை மேற்கொள்ளும் முன்மொழிவுகளை அரசாங்கம் முன்வைத்துள்ளது. இந்த முன்மொழிவுகளின் சாராம்சம் தான் உயர் கல்வித் துறையிலிருந்து அரசு விலகுவதாகும். உயர்கல்விக்கான பொறுப்பை நேரடியாக ஏற்றுக் கொள்ள தற்போதைய அரசாங்கம் தயாராக இல்லை. எனவே இதனால் உள்ளோர் இல்லாதோர் இடைவெளி கணிசமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. இளைஞர்களின் விரக்திப் போக்கு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

அரசாங்கம் கொண்டு வந்துள்ள பிரேரணைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை இல்லாதொழிப்பது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல முக்கிய செயற்பாடுகளை கொண்டுள்ளது. பல்கலைக்கழக கட்டமைப்பின் கல்வித் தரத்தைப் பாதுகாப்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். உயர்கல்விக்கான முன்மொழிவுகளை அரசாங்கம் கொண்டு வந்தாலும், அவை நேர்மையான முன்மொழிவுகள் அல்ல.

அத்துடன், வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கி, அவர்களை நாட்டிற்கு அழைத்து வந்து, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறச் செய்து, அவர்களுக்கு இலங்கையில் வேலை வாய்ப்பு வழங்குவதற்கான வேலைத் திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது.

இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர். அவர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த முயற்சியை முறியடிக்க பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும்.

உயர் கல்வியை இல்லாதொழிக்க இந்த மக்கள் ஆணை இல்லாத அரசாங்கத்திற்கு இடமளிக்கக் கூடாது எனத் தெரிவித்தார். (நி-6)

# ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதனை ரணிலால் தடுக்க முடியாது- நளின் பண்டார

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தடுக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"விரைவில் இந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினாலும் தடுக்க முடியாது.

அரசியலமைப்பின் சட்டத்தை அவர் மீறி செயற்பட முடியாது. நாட்டு மக்களின் நலனுக்காக செயற்படக்கூடிய ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய தருணம் வந் துள்ளது.

2019 ஆம் ஆண்டு அந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டது. அப்போது சஜித் பிரேமதாச 56 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தார்.

ஆனால் அவர் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டது ஏனெனில் தேர்தலில் போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்ஷ நாட்டில் இனவாத மதவாத பிரிவினைகளை ஏற்படுத்தினார்.

ஏப்ரல் 21 தாக்குதல் விவகாரத்தை தேர்தல் வெற்றிக்காக பயன்படுத்தினார்.

ஆனால் இந்த நாட்டு மக்கள் இனியும் ஏமாற மாட்டார்கள். 2024 ஆம் ஆண்டு இந்த நாட்டு மக்கள் நாட்டிற்கு பொருத்தமான தலைவரை தெரிவு செய்வார்கள்" என பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.(ம-7,10)

## கல்மடு காட்டில் அனுமதியின்றி மரம்வெட்டிய ஐவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு காட்டுப் பகுதிக்குள் அனுமதி இன்றி உள் நுழைந்து அங்கு பச்சை மரங்களை வெட்டிய இரண்டு உழவு இயந்திரங்களில் ஏற்ற முற்பட்ட ஐந்து பேர் இராமநாதபுரம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் வெட்டிய மரங்கள் அனைத்தும் நீதிமன்றம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி தெரிவித்துள்ளார். (நி-6-316)

## மஹரகமவில் வடிகானில் 180 கடவுச்சீட்டுகள் அடங்கிய பை மீட்பு

மஹரகம பகுதியில் உள்ள வடிகான் ஒன்றில் கடவுச்சீட்டுகள் அடங்கிய பை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின் போது, அந்த பையில் மஹரகமவில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் இருந்து [illegible] 180 வெளிநாட்டு கடவுச் சீட்டுகள் குறித்த பையில் இருப்பது தெரியவந்துள்ளது.

இந்த விவகாரத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் நபர் சுமார் 26 கோடி ரூபாவை மோசடி செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படு[illegible]. (ம-7.10)

## மன்னார் வைத்தியசாலைக்கு இந்திய அரசாங்கத்தால் 600 மில்லியன் நிதியுதவி

மன்னார் பொது வைத்தியசாலைக்கு 600 மில்லியன் ரூபா நிதியை நன்கொடையாக வழங்க இந்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த அனுமதி கிடைத்துள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவிற்கான கட்டட நிர்மாணப் பணிகளுக்கும், மருத்துவ உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்குமாக இந்த 600 மில்லியன் ரூபா நன்கொடை பயன்படுத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ், மாகாண சபையால் திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு சுகாதார அமைச்சின் ஊடாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடம் விண்ணப்பம் சமர்பிக்கப்பட்டது. இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இந்திய அரசாங்கம் 600 மில்லியன் ரூபா நன்கொடையை வழங்குவதற்கான அனுமதியை அளித்துள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு இன்மையால் மக்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் முகமாக வடக்கு மாகாண ஆளுநர் அவர்களினால் இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ம-7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயத்திற்கான உருவாக்கமே செஞ்சிலுவை சங்கம்

சுவிஸ் நாட்டில் பிறந்த ஜீன் ஹென்றி டுனான்ட் 1863ஆம் ஆண்டு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தை உருவாக்கினார். இவரது பிறந்த தினமாகிய மே 8 சர்வதேச செஞ்சிலுவை தினமாக கொண்டாடப்படுகிறது.

சொல்பரினா என்ற இடத்தில் இரு நாடுகளுக்கிடையில் இடம் பெற்ற மோதலினால் பாதிப்புற்ற போர் வீரர்களையும் பொது மக்களையும் தன் கண் முன்னால் கண்டபோது, இதிலிருந்து மக்களை பாதுகாக்க வேண்டுமென்ற மனிதநேய அடிப்படையில் இவரினால் உருவாக்கப்பட்டதே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமாகும்.

இவரது கோட்பாட்டின் அடிப்படையில் அனர்த்தம் அல்லது மோதலினால் ஏற்படும் மனித துன்பங்களை தவிர்ப்பதற்கு அல்லது ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற தவிர்க்க முடியாத மனித நேயத்தின் சிறப்புத் தொன்மையை வலியுறுத்தும் ஒரு அமைப்பே செஞ்சிலுவைச் சங்கமாகும்.

தொண்டர்களை சர்வதேச செஞ்சிலுவைக் குழுவில் இணைக்கப்பட வேண்டுமென்ற காரணத்தால் 1864 இல் பல்வேறு சங்கங்களையும், ராஜதந்திரங்களையும் இணைத்து முதலாவது ஜெனிவா சாசனத்தை உருவாக்கினார். சர்வதேசத்தின் அங்கீகாரம் பெற்ற ஒரு அமைப்பாக இது உருவாகியது.

தனது நாடாகிய சுவிஸ்சர்லாந்தின் தேசியக் கொடியாகிய சிவப்புப் பின்னணியை கொண்ட வெள்ளை சிலுவையை மாற்றிய மைத்து வெள்ளை பின்னணியில் சிவப்பு சின்னத்தை அமைத்து உருவாக்கியதே இச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமாகும்.

வெள்ளை நிற பின்னணியை கொண்ட சிவப்பு சிலுவை கொண்டு இயங்கியதுடன், பிற்காலத்தில் செம்பிறையை தனது சின்னமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் இணைத்துக் கொண்டது.

மனிதநேய அடிப்படையிலான மனிதாபிமானம், பாரபட்ச மின்மை, நடு நிலைமை, சுயாதீனம், ஒருமைப்பாடு, சர்வதேசமயம், தொண்டர் சேவை என்ற ஏழு கொள்கைகளை தன்னகத்தே கொண்டு செயல்படும் நிறுவனமாகும்.

செஞ்சிலுவைச் சங்கம் 3 வகையான அமைப்பை கொண்டதாகும். தனது செயற்பாட்டை யுத்த பிரதேசங்களிலும், இயற்கை அனர்த்தம் நடக்கும் பிரதேசங்களிலும், செயலாற்றி பெரும் பாலான நாடுகளில் செயற்பட்டு வருகின்றது. சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கக் குழு ஆயுத மோதல்களினாலும், உள் நாட்டு கலவரங்களினாலும், பாதிக்கப்படும் மக்களுக்கு சர்வதேச நாடுகளினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நடுநிலைமையான மனித நேய அமைப்பாகும்.




இது மோதல் அல்லது அனர்த்தத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்கு சர்வதேச உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் மனிதநேய நிறுவனமும் ஆகும். போர்க்காலங்களில் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட நியமங்களை வலியுறுத்தும் நிறுவனமாகும்.

இது மாறிவரும் யுத்த ஆயுதங்களின் பயன்பாட்டிற்கேற்ப தனது சட்டங்களையும், நியமங்களையும், சர்வதேச அங்கீகாரத்துடன் மாற்றி அமைத்துக் கொள்ளும். ஆயுதப் பயன்பாட்டில் ஏற்படும் மாற்றங்களினால் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியது மட்டுமன்றி, கால நிலை மாற்றத்தினால் அடிக்கடி ஏற்படும் உலக அனர்த்தத்தையும் தன்னகத்தே கொண்டு தனது சேவையை மேற்கொண்டு வருகின்றது.

இது 197 தேசிய சங்கங்கள் இணைத்து உருவாக்கப்பட்ட சம்மேளனமாகும். பிற்காலத்தில் சர்வதேச செஞ்சிலுவை சங்கங்களின் சம்மேளனம் மற்றும் தேசிய சங்கங்களும் அந்த நாடுகளுக்கு பொருத்தமான தனது சின்னங்களை பயன்படுத்திக் கொள்ளும் சர்வதேச செஞ்சிலுவை சங்கங்களின் சம்மேளனம், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதுடன், தேசிய சங்கங்களையும், அதனது செயற்பாட்டை வலிமைப்படுத்துகின்றது.

சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை சங்கங்களின் சம்மேளனம் அதனது நான்கு முக்கிய அங்கங்களான மனித விழுமியங்களை மேம்படுத்தல், அனர்த்தங்களுக்கு பதிலிறுத்தல், அனர்த்த முன்னாயத்தம், சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்றவற்றை ஒன்றிணைத்து ஒரு வலையமைப்பை உருவாக்கும். அதாவது உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டையும் இணைக்கின்றது. இதுதான் சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை சங்க சம்மேளனத்தின் பிரதான பலமாகும்.

இதனுடைய பிரதான நோக்கம் தேசிய சங்கங்களுக்கு நிவாரண நடவடிக்கைகளுக்கு உதவுதல், ஆலோசனை வழங்குதல், பிராந்திய அளவிலான ஒத்துழைப்பை ஊக்குவித்தல் மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை சங்கங்களின் சம்மேளனத்தின் சட்ட அந்தஸ்தின் கீழ் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் செயற்படும்.

தேசிய சங்கங்கள் உரு வாகிய போது 1936 ஆம் ஆண்டு இலங்கையில், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உருவாகியது. இச்சங்கம் ஏனைய தேசிய சங்கங்கள் போல் அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதுடன் அனர்த்தம் ஏற்படும் போது அதை எதிர்கொள்வதற்கு அனர்த்த முகாமைத்துவ பயிற்சி, முதலுதவிப் பயிற்சி, அடிப்படை சுகாதார சேவை, இரத்த தானம், நடமாடும் மருத்துவ சிகிச்சை, நோய்களுக்கு விழிப்புணர்வு (எயிட்ஸ், டெங்கு), பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத் திட்டங்கள், வைத்திய சாலைப் புனரமைப்பு, மீளக் குடியமர்ந்த மக்களுக்கு நிவாரண உதவிகள் என்பவற்றை செய்து வருகின்றது.

செஞ்சிலுவைச் சங்கம் மனித நேய நிறுவனம் என்ற அடிப்படையில் அனர்த்தம் அல்லது மோதலினால் பாதிக்கப்பட்டவர்களை கௌரவத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்காக அனைத்து அடிப்படை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் ஒரு அமைப்பாகும்.

பாதிக்கப்பட்ட மக்களின் நீர் விநியோகம், தேகாரோக்கியம், உறைவிடம், குடியிருப்பு, உணவு அல்லாத விடயங்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனம், மொழி, பாலினம் போன்ற வேறுபாடின்றி எதுவும் பார்க்காது சேவை வழங்குவதே. பாரபட்ச மின்மை, பக்க சார்பின்மை என்ற கொள்கையை செஞ்சிலுவைச் சங்கம் நிலைநிறுத்தி நிற்கும்.

அனர்த்தத்தினால் அல்லது மோதலினால் இழந்து போன வாழ்க்கை முறையை மீள உருவாக்குவதற்கான சகல நடவடிக்கைகளையும், செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்வதுடன் எதிர்காலத்தில் அவர்களது வாழ்வாதாரம் போன்ற விடயங்களையும் கவனத்தில் எடுக்கும்.

எதிர் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைக்கு நம்பிக்கையூட்டக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் செஞ்சிலுவைச் சங்கம் உலகளாவிய ரீதியிலும் தேசிய ரீதியிலும் மேற்கொள்ளும் ஒரு மனிதநேய அமைப்பாகும்.

திரு.ச.திரவியராசா-தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்.கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைவரையும்...

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் கூறிய தாவது,

"நாட்டு மக்கள் என் பக்கம் நிற்கும் போது வேட்பாளர்களைக் கண்டு நான் அஞ்சமாட்டேன். சகல வேட்பாளர் களுடனும் பகிரங்க விவாதம் நடத்த வும் நான் தயார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் பெருவாரியான அங்கீகாரம் எனக்குக் கிடைக்கும். நான் ஊழல், மோசடிகளைச் செய்யவில்லை. கொலைகளைச் செய்யவில்லை. எப் போதும் மக்களுக்காகவும் நீதிக்காக வுமே குரல் கொடுத்து வருகின்றேன்" என்றார். (ம-7,10)

## மல்லாகத்தில்...

இதன்போது அந்தக் கொல்களத் தில் இருந்து ஒரு பசுவும் அதன் கன் றுக்குட்டியும் மீட்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றத்தின் உத் தரவுக்கமைய குறித்த பசுவும் கன்றுக் குட்டியும் தெல்லிப்பழையிலுள்ள "அன்பு இல்லம்" எனும் பராமரிப்பு நிலையத் தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் விசா ரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## கெஹலிய...

இது தொடர்பான வழக்கு மாளிகா கந்த நீதவான் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வழக்கு தொடர் பில் கைது செய்யப்பட்டு விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## தெல்லிப்பழை...

நிலையில், பொலிஸ் ஊடகப் பேச் சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ சந்தேகத்துக்கிட மான முறையில் உயிரிழந்த பெண் ணின் 16 வயதுடைய மகன் மீது நேற்று சந்தேகம் வெளியிட்டிருந்தார்.

கைபேசி விளையாட்டுக்களுக்கு அடிமையான மேற்படி மகன், தாயா ரின் சடலம் மீட்கப்பட்ட பின்னர் தலை மறைவான நிலையில், நேற்று முன் தினம் இரவு சரணடைந்துள்ளார்.

இவரிடம் விசாரணைகள் இடம் பெற்று வருவதோடு நேற்று மதியம் யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள் ளார். (ம-7,10)

## விசா கட்டணம்...

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இத னைத் தெரிவித்துள்ளது.

இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட ஏழு நாடுகளின் குடிமக் களுக்கு இலவச விசா சேவைகளை வழங்குவதையும் அமைச்சரவை மீண் டும் உறுதிப்படுத்தியது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் வெளிநாட்டினருக்கு நாட்டிற்குள் நுழையும்போது உரிய விசாக்களை வழங்குவதை தொடர்ந்து மேற்பார்வையிடும். சுற்றுலாத்துறை யில் உள்ள பல்வேறு பங்குதாரர்களின் அழைப்புகளுக்கு பதிலளிக்கும் வித மாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## கிளிநொச்சியில்...

ஊடகப் பேச்சாளர் சுகாஷ் நேற்றுக் காலை குறித்த பகுதியை நேரில் சென்று பார்வையிட்டதோடு இவ்விடத் தில் தொடர்ந்து இராணுவத்தினர் ஆதிக்கம் செலுத்துவது தொடர்ந்தால் மக்களே ஒருமித்த அளவிலான போராட்டம் ஒன்றை மேற்கொள்ள வுள்ளதாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

மேலும் பூநகரி பொன்னாவெளி பகுதியில் வளங்கள் சூறையாடப்படு கின்றது. உருத்திரபுரம் உருத்திரபுரீஸ் வரர் ஆலயம் ஆக்கிரமிக்க முயற்சிக் கப்படுகிறது.

இவ்வாறான நிலையில் அனுமதி யில்லாது இராணுவம் மேற்கொள்ளும் கட்டுமானத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

அத்துடன், கரைச்சி பிரதேச சபைக் குச் சென்று அங்கு கரைச்சி பிரதேச செயலாளரிடம் இச்சம்பவம் தொடர் பாக உரிய விசாரணை மேற்கொள் ளப்பட வேண்டுமெனவும் தெரிவித் துள்ளார். (ம-7,10)

## மருமகனின்...

வவுனியா, மதுராநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வசிக்கும் குறித்த இருவருக்கும் இடையில் நீண்ட நாட் களாக கருத்தும் முரண்பாடுகள் இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் வெளியில் சென்று விட்டு மாலை வீடு திரும்பிய மாமன் மீதே மருமகன் கோடரியால் தாக்கி யுள்ளார்.

இதில் படுகாயமடைந்த குறித்த நபரை உறவினர்கள் மீட்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவர் ஏற்கெனவே மரண மடைந்து விட்ட தாக வைத்தியர் கள் தெரிவித்த னர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலி ஸார் விசாரணை களை மேற் கொண்டு வரு கிறார்கள். (ம-7,10, 250)

## இலங்...

இலங்கையின் நடப்புப் பொரு ளாதாரம், அரசி யல் நிலைமை கள் தொடர்பில் ஐக்கிய இராச்சி யத்தின் இந்து பசுபிக் பணிப் பாள ருடன் ஜே.வி.பி தலை வர் அநுர குமார திஸாநாயக்க சந்தித்து கலந்து கலந்துரையாடி யுள்ளார்.

ஐக்கிய இராச் சியத்தின் வெளி விவகார, பொது நலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்து பசுபிக் பிராந்திய பணிப் பாளர் பென் மெல ருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திசா நாய க்கவிற்கும் இடை யிலான சந்திப் பொன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த சந் திப்பானது நேற்று பிற்பகல் மக்கள் விடுதலை முன் னணியின் தலை மையகத் தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப் பில் ஐக்கிய இராச்சியத்தின் வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இலங்கைப் பிரதானி ஹூமைரா ஹாசியா, இலங்கைக்கான பிரித் தானியாவின் உயர்ஸ்தானிகர் என்ருவ் பெட்றிக் மற்றும் முதலாவது செயலா ளர் ரொம் சொப்பர் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறை வேற் றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது இலங்கையின் நடப்பு பொருளாதார, அரசியல் நிலைமை கள், பிராந்திய புவி அரசியலில் நிலவும் சவால்கள் மற்றும் ஐக்கிய இராச்சி யத்திற்கும் இலங்கைக்கும் இடையி லான உறவுகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### மஹஜன சம்பத

திகதி 2024.05.06 — சீட்டிழுப்பு இலக்கம் 5467

B 2 5 7 3 6 2

அத சம்பத — B 7 3 6 2 — சீட்டிழுப்பு இலக்கம் 0042

### தன நிதானய

திகதி - 2024.05.06 — சீட்டிழுப்பு இலக்கம் - 1497

S 03 60 77 78 S — Double Chance 20740

### மெகா பவர்

திகதி 06/05/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1815

Y 19 28 33 39 69 — 63528

### லக்கி 7 VIP

திகதி 2024.05.06 — சீட்டிழுப்பு இலக்கம் 0293

R 9 7 5 9 4 6 R

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3709 — சீட்டிழுப்பு திகதி 06.05.2024

U 13 47 48 72 — U 12215

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.05.06 — சீட்டிழுப்பு இலக்கம் 0776

மகரம் 39 40 53 56 மகரம் — 44718 — 25

### சுப்பர் தன சம்பத

06.05.2024 — வெற்றி வாரம் 175 — வர்ணம் ஊதா

V 5 1 0 8 3 1 — P 10786 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,770,816.00

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4153 — வர்ணம் மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2024.05.06 — தினம் திங்கட்கிழமை

10 18 28 29 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,514,587.60 — 943222

### SUPER BALL

2441 — ஊதா — 06.05.2024 — திங்கள்

02 08 23 24 L — 46684 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,933,673.60

### சனிதா

2024.05.06 — வெற்றி வாரம் 4602

15 24 40 72 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,978,474.80 — 43206

### ஜெப்பக

O 34 02 23 61 71 — 1617 — பச்சை — 06.05.2024 திங்கள் — 925637 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 521,157,356.20

### ஜயோதா

2024.05.06 — வெற்றி வாரம் 2022 — வர்ணம் செம்மஞ்சள்

14 20 42 52 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,286,341.60 — 74548

### அத கோடிபதி ADA KOTIPATHI


திங்கட்கிழமை — வெற்றி வாரம் : 2267 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 111,054,999.20

13 38 64 65 H — 332344

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியில் சிறந்து உயர்வு பெற வாழ்த்துகின்றோம்

பொறியியலாளர்
திரு.திருபாலசிங்கம் பாரதிதாசன்
(B.Eng (India), M.Eng (Moratuwa) M.Sc Hydrology and Water Resources(UNESCO-IHE-DELFT), MBA(Rajarata), C.Eng (SL) and FIE (SL)




"பதவி நிலை உச்சம் தொடும் பாரதிதாசன்
பண்பினால் சிறந்த நேர் நிலையாளன்
தமிழின உணர்வுடன் செயற்படும் வீரன்
தேசத்தில் காண்கிறார் உயர் வகி பாகம்"

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் புதிய பொது முகாமையாளராக நேற்றைய தினம் (திங்கட்கிழமை - 06.05.2024) கொழும்பில் பதவியேற்ற எமது மதிப்பார்ந்த எந்திரி திருபாலசிங்கம் பாரதிதாசன் அவர்கள் தன் பணியில் சிறந்து மேன்மேலும் உயர்வு பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(675)

வாழ்த்துவோர் : திட்டப்பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள்
யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டம்
யாழ்ப்பாணம்


# ஜனாதிபதி பதவிக்கு அனுபவம் கொண்ட ஒருவரே தேவை

## சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பதவிக்கு அனுபவம் கொண்ட ஒருவரே தேவை என சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி வேட்பாளராக ஒருவரை தெரிவு செய்தற்கு முன், அவரின் வாழ்க்கை வரலாறு மற்றும் எவ்வாறான வேலைத் திட்டங்களை செய்திருக்கின்றார் என்பது குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எமது கட்சியிலிருந்து தகுதியான ஒருவரின் பெயர் குறிப்பிடப்படும். அது குறித்து தாம் இன்னும் தீர்மானிக்கவில்லை என தெரிவித்த அவர்,

மக்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் நம்பிக்கை ஏற்படும் வகையில், நாம் முடிவொன்றை எடுப்போம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாடு தற்போது ஓரளவுக்கு முன்னேற்றமடைந்து வருவதாகவும், ஜனாதிபதி என்ற பதவிக்கு முழு அனுபவம் கொண்ட ஒருவரே தேவை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி என்ற பதவியை தாமே வைத்திருப்பதை விட, தகுதியானவர்களுக்கு இடம்கொடுக்க வேண்டும் எனவும் சமல் ராஜபக்ஷ வலியுறுத்தினார்.(ம-7.10)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிப்பு நியாயமானதல்ல - தயாசிறி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாச ராஜபக்ஷ போட்டியிடுவார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளமையானது நியாயமானதல்ல என சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து என்னை நீக்கியமை குறித்து நான் கவலையடையவில்லை. ஆனால் கட்சிக்கும் எனக்குமிடையிலான பிணைப்பை முற்றாக இல்லாமலாக்கும் வகையில் எனது உறுப்புரிமையும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பறிக்கப்பட்டமையே வேதனையளிக்கிறது.

எவ்வாறிருப்பினும் எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிமன்றத்தின் ஊடாக நீதி கிடைக்கும் என்று நம்புகின்றேன். கட்சியின் அங்கத்தவர்கள் அல்லாத ஒருவர் தற்போது பதில் தவிசாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

மலைநாட்டு ஒப்பந்தத்தின் மூலமே எமது நாடு காட்டிக் கொடுக்கப்பட்டது. அதேபோன்று தற்போது மலைநாட்டுப் பகுதியில் உள்ள ஒருவரால் சுதந்திர கட்சியும் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. அவரே புதிய தவிசாளருக்கான பெயரை முன்மொழிந்துள்ளார்.

பதில் தவிசாளராக நியமிப்பதற்கு சுதந்திர கட்சியில் வேண்டியளவு சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளனர்.ஆனால் இன்று காசுக்காக கட்சி காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மே தினத்தன்று விஜேதாச ராஜபக்ஷவே ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஆனால் அவரால் அவ்வாறு தனித்து தீர்மானம் எடுக்க முடியாது என்றார். (ம-7.10)


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0299)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது :- 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-0299)

CANADA VISA
உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
20 வருட அனுபவம், 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம். (511)
021 222 5686
076 424 7111
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

காணி விற்பனைக்கு
இராசபாதை றோட்டில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
கரந்தன் நீர்வேலியில் 29 பரப்பு வாழைத்தோட்டம் விற்பனைக்கு உண்டு.
(679)
077 773 0567


## மரண அறிவித்தல்



## திருமதி புட்கலை திருநாவுக்கரசு

வேலணை மேற்கு, வேலணை 08 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புட்கலை திருநாவுக்கரசு அவர்கள் 06.05.2024 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் முருகேசு - பெரியநாயகி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் சதாசிவம் - பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும் திருநாவுக்கரசு அவர்களின் அன்பு மனைவியும் தர்சிகா, தர்சன், சுலக்சன்(இந்துமதி கபே -கொழும்பு), மயூரிகா(அபிவிருத்தி உத்தியோகத்தர் - ஊர்காவற்றுறை பிரதேச சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயரூபன்(சபரிஷ் ஹாட்வெயார்), கிருஸ்ணானந்தி, திவாகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சங்கானை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமியும் பாலகிருஸ்ணன், கானசரஸ்வதி (டென்மார்க்), சிவபாலன்(அமெரிக்கா), சுசிலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான திலகவதி, அன்னபூரணம் மற்றும் இராசமணி, புஸ்பராணி, நித்தியானந்தன்(டென்மார்க்), பாலரஞ்சினி (அமெரிக்கா), மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் டாரணிஜா, சபரிஷ், கஸ்மியா(மாணவர்கள் வேலணை மேற்கு நடராஜா மகா வித்தியாலயம்), ஸ்ரீ அனிர்வின், பிருத்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2024) செவ்வாய்க் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்திற்குச் எடுத்துச் செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நடராஜா வீதி,
வேலணை மேற்கு,
வேலணை - 08

தகவல் :
[illegible]
077 98 33 217
(C-0302)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0298)
076 825 7716 (ஆகாஸ்)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
◆ 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
◆ குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
◆ சுன்னாகம் நகரம் 1 Km
◆ ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
◆ தரகர் தேவையில்லை.
(625)
077 88 62 927

பணியாளர்கள் தேவை
யாழ் மகிழ் A to Z Service நிறுவனத்திற்கு பணியாளர்கள் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும்.
தகைமை : உயர் தரம் சித்தி அடைந்தவர்கள்
நேர்முகத் தேர்வு : 08.05.2024
நேரம் - காலை 9.30 - பி.ப 5.00 மணி வரை.
077 07 07 864
021 22 20 929
(674)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.